பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 25 வியாழக்கிழமை 10 .08.2023 கதிர் 272

## பிரான்ஸ் பேராசிரியர்கள் கந்தரோடையில் ஆராய்ச்சி





(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம் கந்தரோடைப்பகுதியில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரு பேராசிரியர்கள் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டுவருகின்றனர்.

பேராசிரியர்களான மாதவி மற்றும் ஆருண்யா ஆகிய இருவருமே இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை அரசினதும் தொல்லியல்த் திணைக்களத்தினதும் உத்தியோக பூர்வ அனுமதியைப் பெற்று இடம்பெறும் இந்த ஆய்வில் தொல்லியல்த் திணைக்கள அதிகாரிகளும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதற்காக தொல்லியல்த் திணைக்கள அதிகாரி சம்பத் மற்றும் ஓய்வு பெற்ற அதிகாரி பெரேரா ஆகியோருடன் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் தொல்லியல்த்துறை பேராசிரியர் க.புஸ்பரட்ணமும் இணைந்துள்ளார்.

கந்தரோடைப் ☞2

## 13 தீர்வுமல்ல: தொடக்கமுமல்ல சமஷ்டி ஒன்றே தீர்வுக்கான வழி

### முன்னணி ஜனாதிபதிக்குப் பரிந்துரை

தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே இனப்பிரச்சினையை தீர்க்கஒரேவழியெனதமிழ்த்தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதிக்கு பரிந்துரை

13ஆவது திருத்தம் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியுமல்ல. தீர்வுமல்ல. இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு எட்டப்பட வேண்டுமாயின் தமிழர் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே உறுதிப்படுத்துவதே ஒரேவழியெனதமிழ்த்தேசியமக்கள் முன்னணி பரிந்துரைத்துள்ளது.

கடந்த வாரம் 13ஆம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கட்சித் தலைவர்களிடம்கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு எழுத்து மூலம் நேற்று கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற ☞2

## பிரான்ஸ் சுற்றுலாவியின் கமெரா தீவகத்தில் களவு

(ந.லோகதயாளன்.)

பிரான்சில் இருந்து யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுப் பெண் அதிகாரி ஒருவரின் 45 லட்சம் ரூபா பெறுமதியிலான ஒளிப்படக் கருவி களவாடப்பட்டுள்ளாதாக முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் ஓர் பணிக்காக அரச அனுமதி பெற்று வருகை தந்த பிரான்ஸ் அதிகாரிகள் இருவர் சுற்றுலா நோக்கில் ஊர்காவற்றுறைக்குப் பயணித்தபோதே அவர்கள் எடுத்துச்சென்ற ஒளிப்படக்கருவி களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறையிட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை பொலிஸில் இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. தனது கமெரா திருடப்பட்டதால் தான் யாழ் ☞2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர்சஜித்பிரேமதாசவுக்கும் இடையில் நேற்று நாடாளுமன்றத்தில் திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் ஒருவரையொருவர் ஒரு அற்பப்பதர் என்கிற வகையில் கருத்துக்களை எடுத்தெறிந்தனர்.

நாடாளுமன்றில்ஜனாதிபதியின்நேற்றைய விசேட உரையை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டது. அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதியின் உரை முடிந்தவுடன் எழுந்த எதிர்க்கட்சித்தலைவர், ''மக்கள் ஆணைக்கு இடமளிப்பதே சிறந்த ஜனநாயக செயற்பாடு என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுகிறேன். மக்களுடைய கருத்துக்களை செவிமடுத்து அவற்றுக்குச் சந்தர்ப்பம் அளிப்பது இந்த தருணத்தில் செய்யப்படவேண்டிய முக்கியமான செயற்பாடாக இருக்கிறது. மக்கள் ஆணை கிடைத்ததன் பின்னர் அந்த மக்கள் பிரதிநிதிகள் 13ஆவது திருத்த சட்டத்தினுடைய எதிர்காலம் சம்பந்தமாக தீர்மானிக்க முடியும்'' - என்றார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ''தேர்தலை நான் ☞2

## காரைநகருக்கு புதிய செயலர்

(ந.லோகதயாளன்.)

பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் கிருஸ்ணேந்திரன் காரைநகர் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

காரைநகர் பிரதேச செயலாளராக இருந்த ஜெகு நிர்வாக சேவையில் விசேட தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்ட நிலையில், வடக்கு மாகாண சபைக்கு மாற்றலாகியதனால் காரைநகர் பிரதேச செயலாளர் பதவி விற்றிடமாகியது. இந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் இடம்பெற்ற நேர்முகத்தேர்வில் தற்போதைய பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் கிருஸ்னேந்திரன் ☞2

# 13க்கு நீங்களே தீர்வைக் காணுங்கள் இல்லையேல் நிம்மதியே கிடைக்காது

### நாடாளுமன்றில் ரணிலை நோக்கி சாபம் விட்ட வெல்கம

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு உங்களின் காலத்தில் தீர்வு காணுங்கள். இல்லையென்றால் எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் உட்பட எதிர்காலதலைமுறையினர் பாதிக்கப்படுவார்கள். அவ்வாறு நிகழ்ந்தால்நீங்கள்வாழ்ந்தாலும், இறந்தாலும் நிம்மதியாக இருக்க முடியாது.'

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நோக்கித் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் குமார வெல்கம எம்.பி.

அவர்மேலும்உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனா திபதி முன்வைத்துள்ள யோசனைகளை மீளாய்வு செய்வதாக ☞2

## நாடாளுமன்ற ஒப்புதலுடன் மட்டுமே 13ஐ நடைமுறைப்படுத்த முடியும்

### நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி நேற்று உரை

நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் மட்டுமே 13ஐ நடைமுறைப்படுத்த முடியும் என்றுதெரிவித்தார்ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகிர்வுதொடர்பான தனதுமுன்மொழிவுகளையும் எதிர்கால திட்டங்களையும் நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ஆற்றிய முழுமையான உரை அப்படியே வருமாறு:

1987ஆம் ஆண்டு அசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. எமது நாட்டில் 36 வருடங்களாக மாகாண சபை முறைமை செயற்பட்டு வருகின்றது. எனினும் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதம் தொடர்பில் பல சிக்கல்கள் உள்ளன. அத்துடன் மாகாண சபைகள் தொடர்பிலும் பல பிரச்சினைகள் உள்ளன.

நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால், இந்தப் பிரச்சினைகளைத்தீர்க்கவேண்டும்.எமது நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தம் அமுல்படுத்தப்படவேண்டும்.

ஆனால் இந்த நாடாளுமன்றத்தில்நாம்அனைவரும் வெளிப்படையாகவும் நடுநிலையாகவும் ஆழமாகக் கலந்து ரையாடிய பின்னர் ஓர் உடன்பாட்டிற்கு வந்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும். அதனால்தான் அண்மையில் சர்வகட்சி மாநாட்டை ஏற்பாடு செய்தோம். ☞2

## ரணிலின் நேற்றைய உரை பற்றி பதிலளிக்க அவசரப்படவில்லை

### இரா. சமபந்தன் தெரிவிப்பு

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டுப் பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்.'

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

"13ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு இந்தநாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்'' - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தார்.

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்து விசேட உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த உரை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் ☞2

## வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி அம்பாறையில் போராட்டம்



அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி இன்று (09) மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

போர்க்காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி வடக்கு, கிழக்கில் கவனயீர்ப்புப்போராட்டங்கள் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது இரத்தச் சொந்தங்களுக்கு நீதி கோரி நேற்றுடன் 2000 நாட்கள் பூர்த்தியாகுவதையொட்டி மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

வடக்கு - கிழக்கு இணைந்த வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

### சமுர்த்தி வங்கியில் அலுவலரால்

## மோசடி செய்யப்பட்ட பணம் திரும்பப் பெறப்படவில்லை

### கணக்காய்வுத் திணைக்களம் தகவல்

(ந.லோகதயாளன்)

கிளிநகர் சமுர்த்தி வங்கியில் இடம்பெற்ற 15 லட்சத்து 26 ஆயிரத்து 457 ரூபா மோசடியில் 11 லட்சத்து 26 ஆயிரத்து 457 ரூபா பணம் இதுவரை மீளச் செலுத்தப்படவில்லைஎன்றுகணக்காய்வுத்திணைக்களம் அறிக்கை யிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கிளிநகர் சமுர்த்தி வங்கியில் கடன் எழுதுநரால் 15 லட்சத்து 26 ஆயிரத்து 457 ரூபா பணம் மோசடி செய்யப்பட்டமை 2021-11-26இல் இடம்பெற்ற தேசிய கணக்காய்வில் கண்டறியப்பட்டது. இதன் பிரகாரம் அந்தப் பணத்திற்கு கடன் எழுதுநரே ☞2

## இனி இது .....

நடத்த போவதில்லை என்று கூறவில்லை. தேர்தல் நடத்துவதாயின் நீங்கள் நம்பிக்கை இல்லா பிரேரணையைக் கொண்டுவர வேண்டும். நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்து அதனை நிறைவேற்றுவதன் மூலம் தான் என்னால் தேர்தல் நடத்த முடியும். அவ்வாறில்லாவிட்டால் என்னால் தேர்தலை நடத்த முடியாது உங்களுக்கு தேர்தல் வேண்டுமானால் நடத்தலாம். அதற்கு முன்னதாக செய்ய வேண்டியவற்றைச் செய்யுங்கள்'' என்றார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையையே எதிர்கொள்ள முடியாத உங்களுக்கு எதற்குத் தேர்தல் என்கிற வகையில் இருந்தது அரசுத் தலைவரின் கருத்துக்கள். அவர் நம்பிக்கையில்லாம் பிரேரணை என்று குறிப்பிட்டது, சுகாதாரத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள பிரேரணையையே. அந்தப் பிரேரணையின் மீது உடனடியாக நேற்று, இன்று, நாளை விவாதம் நடத்தலாம் என்று ஆளும்கட்சி கொடறடா பிரசன்ன ரணதுங்க ஒரு முன்மொழிவைத் திடீரென முன்வைத்தார்.

அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் மலையகம் குறித்த விவாதத்திற்கு ஏற்கனவே கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாள் ஒதுக்கப்பட்ட நிலையில் அதனைக் குழப்பும் விதத்தில் இப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுக்கத் தேவையில்லை. பொருத்தமான நேரத்தில் அதனை விவாதிப்பதற்கு நாம் கோருவோம் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து சஜித் பிரேமதாச, துறைசார் மேற்பார்வைக் குழுவில் தீர்மானித்ததன் பின்னர் அதனை மாற்ற முடியாது. நாம் சுகாதார அமைச்சருக்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லா பிரேரணைஷ் மீளப்பெறப்போவதாக செய்திகள் வெளியிடப்படுகின்றன. உண்மையில் அவ்வாறு செய்யப்போவதில்லை. அது பொய்யான பிரசாரமாகும். எங்களுக்கு மூன்று நாள் விவாதம் தேவையாகவுள்ளது. நாங்கள் அதற்கு தயாராக உள்ளோம் என்றார்.

தொடர்ந்து ஜனாதிபதி, வாசிக்காது, விளங்காது பேசாதீர்கள். உங்களுக்கு விவாதம் செய்வதற்கு தினத்தை ஒதுக்குவதில் எனக்கு எந்த பிரச்சினையும் இல்லை நாளையிலிருந்து சனிக்கிழமை வரை வேண்டுமானால் நான் விவாதத்திற்கு வருகிறேன் நீங்கள் அதற்கு தயாராக இருக்கிறீர்களா என்றார்.

முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் இருவரும் நாடாளுமன்றத்தில் எலியும் பூனையுமாக இப்படிக் கடிபட்டுக் கொண்டிருந்ததை அங்கிருந்த ஏனைய உறுப்பினர்கள் ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தனர்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பிரான்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த பணியை நிறைவு செய்யப் பெரும் தடை ஏற்பட்டுள்ளதாக அவ் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

## 13க்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். சாதக மற்றும் பாதக விடயங்களை ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை அறிவிப்போம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நாங்கள் கொண்டு வரவில்லை நீங்கள்தான் (ஜனாதிபதியை நோக்கி) கொண்டுவந்தீர்கள்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தியுடன் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது நான் உட்பட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச புறக்கோட்டை அரச மரத்தடியில் போராட்டத்தில் ஈடுபட்டோம். போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் பலர் இன்று உயிருடன் இல்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம்பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு உங்களின் காலத்தில் (ஜனாதிபதியை நோக்கி) தீர்வு காணுங்கள். இல்லையென்றால் எங்களைப் போல் எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் எதிர்காலத்தில் தாக்குதலுக்கு உள்ளாகலாம். அவ்வாறு இடம்பெற்றால் நீங்கள் வாழ்ந்தாலும், இறந்தாலும் நிம்மதி இல்லாமல் போகும். ஆகவே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றேன்.' - என்றார்.

## கந்தரோடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் உள்ள ஓர் மண் பிட்டியில் இந்தத் தொல்பொருள் ஆய்வு இடம்பெறுகின்றது. இப் பகுதியில் இயற்கை மண்வரை ஆய்விற்கு உட்படுத்த அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

ஆய்வு இடம்பெறும் பகுதியில் இதுவரையில் ரோமர் காலத்து நாணயங்களும் பொருட்களும் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்ததை ஒத்த பொருட்களும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பகுதிகளில் முன்பும் பல ஆய்வுகள் மேற்கொண்டபோதும் அவற்றின் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதனால் இதன் அறிக்கை கண்டிப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுவதாகவும் அதற்கு யாழ்ப்பாணம் தொல்லியல்த்துறையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

## 13 தீர்வுமல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரால் கையளிக்கப்பட்டது.

அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

13ஆம் திருத்தம் இனப்பிரச்சினைத் தீர்வின் தொடக்கப்புள்ளியாகவோ இறுதித் தீர்வாகவோ ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனைத் தெளிவுபடுத்தி 1987 ஆம் ஆண்டிலேயே தமிழ்த் தரப்புக்களால் 13ஆம் திருத்தம் நிராகரிக்கப்பட்டது என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம் தமிழ்த் தேசம் இறைமை சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அரசியல் யாப்பின் மூலம் மட்டுமே 75 வருடங்களாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

13ஆம் திருத்தம் 1987 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டபோது அதனைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தொடக்கப்புள்ளியாகக் கூட ஏற்றுக்கொள்ள முடியாதெனக் குறிப்பிட்டு அதனைச் சட்டமாக நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாமென்றும் அதனைத் தடுத்து நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி அப்போதய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம், செயலாளர் அமிர்தலிங்கம் சிரேஷ்ட உபதலைவர் இரா.சம்பந்தன் ஆகியோர் ஒப்பமிட்டு அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு அனுப்பிய கடிதமும் இணைக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் பேரவையுடன் இணைந்து தயாரித்த தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டித் தீர்வுக்கான யோசனை வரையும் இணைக்கப்பட்டுள்ளது.

## மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறவேண்டியவர் என்று தெரிவித்து, அதனை மீளச் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டது.

இருப்பினும் மோசடி செய்யப்பட்ட பணத்தில் 4 லட்சம் ரூபாய் மட்டுமே திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது, எஞ்சிய

11 லட்சத்து 26 ஆயிரத்து 457 ரூபாய் பணம் இதுவரை மீளச் செலுத்தப்படவில்லையென தேசிய கணக்காய்வு அலுவலகம் 2023ஆம். ஆண்டு மார்ச் மாத கணக்காய்வின் பின்பு அறிக்கையிட்டுள்ளது. இப் பணத்தை அறவிட உரிய நடவடிக்கை எடுக்காததோடு, சம்பந்தப்பட்ட அலுவலருக்கு எதிராக சமுர்த்தி திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரமும் கணக்காய்வு கிடைக்கவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்றிரவு வினவியபோது,

'அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் எமது உறுதியான நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்துக்குப் பின்னர் அவர் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்திலும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாம் எழுதிய கடிதத்திலும் தெளிவாகத் தெரிவித்துள்ளோம். இந்த நிலையில், 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டுப் பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்.' - என்று குறிப்பிட்டார்.

## காரைநகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்வாகியுள்ளார்.

இவ்வாறு நேர்முகத் தேர்வில் தேர்வானவர் தொடர்பில் ஏதும் ஆட்சேபனை உண்டா என பொதுச் சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் தொடர்பில் ஆட்சேபனைகள் இல்லாதவிடத்து எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் அவர் காரைநகர்ப் பிரதேச செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

# வடக்கு, கிழக்கு, மலையத்தில் சர்வஜன வாக்கெடுப்புக்கு தயாரா?

## சிறிதரன் எம்.பி . நாடாளுமன்றத்தல் கேள்வி



வடகிழக்கு மலையகம் மற்றும் இதர மாவட்டங்களில் செறிவாக வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் தமிழர்களுக்கு தீர்வாக சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்று அவசியமா இல்லையா என்பதை மையப்படுத்தி பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தம் தொடர்பில் விசேட உரையாற்றியதைத் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமான உரையாடல் ஆரம்பித்து இந்த நாட்டில் குழப்பம் ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்ற இலக்கில் ஜனாதிபதி வெற்றிகண்டுள்ளார்.

ஜனாதிபதியினுடைய உரையை அடுத்து கருத்துக்களை வெளியிட்ட தலைவர்களின் கருத்துக்களை அவதானித்த பொழுது அவர்கள் இந்த நாட்டில் ஒரு நிரந்தரமான தீர்வு வரக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள் என்பதை என்னால் அவதானிக்க முடிந்தது.

அடுத்து தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதற்கு அனைவரும் தயாராக உள்ள நிலையில் 13ஆவது சட்டத்தை மையப்படுத்தி குழப்பம் ஒன்றை ஏற்படுத்தும் என்ற ஜனாதிபதியின் முனைப்புக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

வடகிழக்கு மலையகம் மற்றும் இதர மாவட்டங்களில் செறிவாக வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் தமிழர்களுக்கு தீர்வாக சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்று அவசியமா இல்லையா என்பதை மையப்படுத்தி பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா அல்லது தமிழ் மக்கள் தனித்து செல்ல வேண்டுமா இல்லையா என்பதை மையப்படுத்தி வாக்கெடுப்பொன்றைச் செய்வதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

உங்களுடைய அதிகாரத்துக்குள் நீங்கள் சொல்வதைக் கேட்டு தான் தமிழர்கள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் தென்னிலங்கையில் உள்ள அனைத்து அரசியல் தலைமைகளும் கருத்துக்களை வெளியிடுகிறார்கள்.

இனவாத சிந்தனையில் இருந்தும் இனவாத கருத்துக்களில் இருந்தும் வெளியில் வந்து நீதியான முறையில் தமிழ் தேசிய பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு உங்களுடைய சிந்தனையை மாற்ற வேண்டியது அவசியமாகின்றது.

தற்போதைய நிலையில் தேர்தலும் நடக்காது தீர்வும் கிடைக்காது ஆனால் நாட்டில் உள்ள தலைவர்களை குழப்பத்தில் வைத்திருப்பதில் ஜனாதிபதி ரணில் தலைமையிலான இந்த ஆட்சி வெற்றிகண்டிருப்பது தான் உண்மையான விடயமாக உள்ளது - என்றார்.

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன்.

அந்த மாநாட்டில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாகளங்களால் முழுமையான உடன்பாட்டை எட்ட முடியவில்லை. அதிகாரப் பரவலாக்கத்திற்கான ஒரு குறிப்பிட்ட தேசிய வேலைத்திட்டம் பற்றி வெளிப்படையான கருத்துக்கள் எதுவும் அங்கு முன்வைக்கப்படவில்லை. சில அரசியல் கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைக்க தயங்குவதும் விருப்பமில்லாமல் இருப்பதும் தெளிவாகியது. மாநாட்டில் பங்கேற்ற சில அரசியல் கட்சிகள் அவநம்பிக்கையை மனத்தில் வைத்துக்கொண்டு இதில் பங்கேற்றன. கடந்த காலங்களில் நடந்த சில சர்வ கட்சி மாநாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவம் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

இனியாவது நாம் இந்த நிலையை மாற்றுவோம். அரசின் அனைத்து செயல்பாடுகளையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் பங்கு என்று நினைக்கும் மரபிலிருந்து விடுபடுவோம். எதிர்கட்சிகளின் கருத்தை பொருட்படுத்தாமல் செயல்படும் வழக்கத்திலிருந்தும் விலகி இருப்போம். நாம் அனைவரும் நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் செயல்படுகிறோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பாதையில் முன்னேறினால் மட்டுமே நம் நாட்டை முன்னேற்ற முடியும். அந்த புதிய பாரம்பரியத்தை உருவாக்க நாங்கள் பாடுபடுகிறோம்.

நான் எப்பொழுதும் வலியுறுத்தும் ஒரு விடயத்தை இங்கு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தை கிளறிக் கொண்டிருக்காமல் எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்போம். உங்களுக்கும் எனக்கும் கசப்பான அனுபவங்கள் உண்டு. அது உண்மை. ஆனால் அவற்றை பற்றி பேசிக்கொண்டிருக்காமல் எதிர்காலத்தைப் பற்றி ஆராய வேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப்பற்றி சிந்தித்து நேர்மையான நோக்கத்துடன் ஒன்றிணைந்து பொதுவான முடிவை எடுப்போம்.

13 ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகளை அமுல்படுத்துவதில் கடந்த 36 வருடங்களாக நாம் வெற்றி பெற்றுள்ளோமா? தோல்வியடைந்தோமா? அவ்வாறு வெற்றி பெறவோ தோல்வியடையவோ காரணங்கள் என்ன? நாம் இதைப் பற்றி பேசலாம். கலந்துரையாடுவோம். ஆழமாகப் நோக்குவோம். உலகின் புதிய போக்குகளைப் ஆராய்வோம்.

நமது பிராந்தியத்தில் இந்தியா மற்றும் சீனா போன்று மேற்கு நாடுகளான அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய பெரிய நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன. மேலும், பிரித்தானியா, நெதர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளும் அதிகாரத்தை பரவலாக்கியுள்ளன.

சீனாவிலிருந்து ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். சீனாவின் சிறுபான்மையினர் மொத்த மக்கள் தொகையில் 9 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளனர். ஆனால் அவர்கள் இந்த சிறுபான்மையினருக்கு வலயங்கள், கோட்டங்கள் மற்றும் மாநகரங்கள் போன்ற பல நிர்வாகக் கட்டமைப்புகளில் தன்னாட்சி அதிகாரங்களை வழங்கியுள்ளனர்.

தேசியக் கொள்கையின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் ஊடாக, உலகின் பல்வேறு நாடுகள் வெற்றிபெற்றுள்ளன. அந்த நாடுகளில் இருந்து படிப்பினை பெறுவோம். அதையெல்லாம் கருத்தில் கொண்டு நமது நாட்டிற்கு மிகவும் பொருத்தமான கட்டமைப்பை அடையாளம் காண்போம்.

**மாகாணங்களுக்கான செலவு**

மாகாணசபைகளுக்காக வருடத்திற்கு சுமார் 550 பில்லியன் ரூபாவை செலவிடுகிறோம். இந்த பணத்திற்கு மாகாண சபைகளினால் நியாயம் நடந்துள்ளதா? இந்த பணம் மக்கள் நலனுக்காக பயன்படுத்தப்பட்டதா? நாம் கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயமிது.

இலங்கையில் உள்ள ஒவ்வொருவரும் மாகாண சபையை பராமரிக்க 22,000 ரூபாவை செலவிடுகின்றனர். நான்கு பேர் கொண்ட குடும்பம் ஒரு மாகாண

தொடர்ச்சி 10ம் பக்கம்...

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# திருத்தம் 13 தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஒன்றுபட்டுத் தீர்வுகாண முடியாமலுள்ளது

## அமைச்சர் ஹரின் வருத்தம்



13 ஆம் திருத்தம் தொடர்பில் கலந்துரையாடி காணி பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கிலே ஜனாதிபதி அனைவருக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

என்றாலும் நாடாளுமன்றம் என்ற வகையில் ஒன்றுபட்டு இதற்கு தீர்வு காண எங்களுக்கு முடியாமல் இருக்கிறது.

நாடு சுதந்திரமடைந்து 75 வருடமாகியும் நாங்கள் அராஜக நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமைக்கு காரணம் எங்களுக்கு மத்தியில் நல்லிணக்கம் இல்லாமையாகும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ எழுப்பிய இடையீட்டு கேள்யொன்று பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நிமல் பியதிஸ்ஸ எம். பி. தெரிவிக்கையில் -

நுவரெலியா மாவட்டத்தில் மலையகத் தோட்ட பிரதேசத்தில் சில இனவாதிகள் அங்கு சிறுபான்மையாக இருக்கும் சிங்கள மக்களை அவர்களின் காணிகளில் இருந்து வெளியேற்ற திட்டமிட்டு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கை மிகவும் சூட்சுமமான முறையில் இடம்பெற்று வருகிறது. அதனால் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார்.

அதற்கு அமைச்சர் தொடர்ந்து பதிலளிக்கையில் -

நாடு சுதந்திரமடைந்து 75 வருடமாகியும் நாங்கள் அராஜக நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமைக்கு காரணம் எங்களுக்கு மத்தியில் நல்லிணக்கம் இல்லாமையாகும்.

13 ஆம் திருத்தம் தொடர்பில் கலந்துரையாடி அனைவரும் ஏற்றுக்கொள்ள முடியுமான ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் என்ற நல்லெண்ணத்திலேயே ஜனாதிபதி அனைவரையும் அழைத்திருந்தார்.

அப்போதும் சிலர் வருவதில்லை. சிலர் வந்து ஜனாதிபதி தொடர்பாக தேவையற்ற கேள்விகளை கேட்கிறார்களே தவிர நாட்டுக்குத் தேவையான பதிலைத் தேடுவதற்கு, நாடு அராஜக நிலைக்கு செல்ல காரணமான விடயங்களைத் தேடி, அதற்குத் தீர்வு காண யாருக்கும் விருப்பம் இல்லை.

அத்துடன் நாடு வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்திலும் அனைவரும் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்ப நாடாளுமன்றம் என்ற வகையில் எமக்கு முடியாமல் போனது.

மனிதர்கள் வீதியில் மரணிக்கும் போதாவது, ஒன்றுபட்டு செயற்பட முடியாமல் போனதொரு நாடாளுமன்றமாகும்.

அதனால் நாங்கள் அராஜக நிலை தொடர்பாகக் கதைப்பதாக இருந்தாலும் காணி அதிகாரங்கள் தொடர்பாகக் கதைப்பதாக இருந்தாலும் ஆரம்பமாக நாங்கள் சுய விசாரணை செய்துகொள்ள வேண்டும்.

மேலும் 13 ஆம் திருத்தத்தில் இருக்கும் காணி தொடர்பாகக் கலந்துரையாடி அதற்குத் தீர்வுகாணும்போது, பல்வேறு விமர்சனங்களைத் தெரிவித்து அதனைத் தடுக்க முயற்சிக்கின்றனர்.

அதேநேரம் நுவரெலியா பிரதேசத்தில் காணிகளை அபகரிக்கத் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர். அதனால் நாங்கள் அனைவரும் ஓர் இடத்துக்கு வந்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தாலே நாடு எதிர்காலத்திலாவது அராஜக நிலையில் இருந்து மீள முடியும்.

அத்துடன் காணி அதிகாரம் இருப்பது ஜனாதிபதிக்காகும். அதில் சில அதிகாரம் காணி அமைச்சருக்கு இருக்கிறது. அதேபோன்று காணி ஆணையாளர் நாயகத்துக்கு சில அதிகாரங்கள் இருக்கின்றன. காணி விடுவிக்கும் அதிகாரம் இருப்பது பிரதேச செயலகத்துக்காகும். அதனால் நாட்டின் சுயாதீனத்துக்கு பாதிப்பு ஏற்படாமல் நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு நடவடிக்கை எடுப்பது இந்த நாடாளுமன்றத்தின் கடமையாகும். - என்றார். (05)

# விவசாயிகளின் பிரச்சினையை வெளிப்படுத்திய ஊடகங்களுக்கு எதிராக தெரிவுக்குழு அமைப்பு?

## அரசு நடவடிக்கை என சஜித் சபையில் குற்றச்சாட்டு



விவசாயத்துக்குத்தேவையான நீரை வழங்குமாறு போராடி வந்த விவசாயிகளின் பிரச்சினையை நாட்டுக்கு வெளிப்படுத்திய ஊடகங்களுக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு நீரை விநியோகிப்பதற்கு அரசாங்கம் ஆரம்பத்திலேயே தீமானித்திருந்தால் பிரச்சினை தீவிரமடைந்திருக்காது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைமை காரணமாக விவசாயிகளின் விவசாய பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்பட்டு வருவதால், ஒரு வாரத்துக்கு நீரை அந்த பிரதேசத்தில் இருக்கும் நீர்த்தேக்கங்களில் இருந்து விநியோகிக்குமாறு கேட்டிருந்தனர். ஆனால் அரசாங்கம் அதனை நிராகரித்தது.

பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க முடியும் எனவும் விவசாயிகளுக்கு நீரை வழங்கி 3 மணி நேரம் மின்சாரத்தை துண்டிக்க முடியாது எனவும் விவசாயம் பாதிக்கப்படுவதன் மூலம் அரிசிக்கு தட்டுப்பாடுஏற்பட்டால் வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய முடியும் எனவும் அமைச்சரவையில் இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், தேவையான நீரை விநியோகிக்குமாறு விவசாயிகள் வீதிக்கிறங்கிப் போராட ஆரம்பித்தனர். இதனை ஊடகங்களும் நாட்டுக்குவெளிப்படுத்தியதும் தற்போது விவசாயிகளுக்கு நீரை விநியோகிக்க அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. அதேநேரம் விவசாயிகளின் பிரச்சினையை வெளியில் கொண்டுவந்த ஊடகங்களுக்கு எதிராக நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

ஆனால் சீனி மோசடி, வரி குறைப்பின் மூலம் தனவந்தர்களுக்கு கோடிக்கணக்கில் வரி நிவாரணம் வழங்கியமை போன்ற விடயங்களுக்கு தெரிவுக்குழு அமைக்கவில்லை. அதனால் விவசாயிகளுக்குநீரை வழங்காமல் இருப்பதற்கு தீர்மானம் மேற்கொண்டவர்கள் யார்.?

விவசாயிகள் தொடர்பில் அரசாங்கத்துக்குள்ந உணர்வும் இல்லை. அதனால்தான் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கினால்போதும் என அமைச்சரவையில் தெரிவித்தனர்.

ஆனால் தற்போது விவசாயிகள் வீதிக்கிறங்கி போராட ஆரம்பித்த பின்னர் தற்போது விவசாயிகளுக்கு நீரை விநியோகிக்க அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது. இதனை முறையாக முகாமைத்துவம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் ஆரம்பத்திலேயே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால்தற்போது அரசாங்கம் விவசாயிகளுக்கு நீரை வழங்கினாலும் விவசாயிகளின் பாரியளவிலான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு அழிவடைந்துள்ளன. அரசாங்கத்துக்குள் சரியான தொடர்பாடல் இல்லாமையே இதற்குக் காரணமாகும். - என்றார். (05)



# அம்பாறை பிரதேச செயலகங்களில் சிங்கள மொழியில் விண்ணப்பங்கள்

## சிரமத்தில் தமிழ் மக்கள்

வெளிநாடுகளில்தொழில் புரியும் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு 10ஆயிரம் ரூபா பெறுமதியான பொதி வழங்கல் எனும் தொனிப்பொருளில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் தற்போது தமிழ் பேசும் மக்களுக்கு சிங்கள மொழியிலான விண்ணப்பங்கள்விநியோகிக்கப்படுகின்றன.

இவ்வாறு சிங்கள மொழியில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்ய முடியாமல் தமிழ் பேசும் மக்கள் அலைந்து திரிவதை அவதானிக்க முடி கின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சகல வெளிநாடு தொழில்களுக்காக சென்று இருக்கும் பெற்றோர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் கற்றல் உபகரணங்கள் (10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொதி) கொடுக்கப்படும் என கூறி இப்பிரதேச செயலகங்களில் தமிழ் மொழி மூலம் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

பின்னர் தமிழ் மொழி மூலம் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என கூறி சில அலுவலகர்கள் தமிழ் மொழி பேசும் மக்களுக்கு தனிச்சிங்கள மொழி மூல விண்ணப்ப படிவங்களை வழங்கி உடனடியாகப் பூர்த்தி செய்து தரவேண்டும் என வற்புறுத்துகின்றனர் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இந்த விடயம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் உரிய கவனம் செலுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (05)

# உடவளவ விவசாய வலய நீர் விடுவிப்பு தாமதத்தால் அரசுக்கு பாதிப்பில்லை; விவசாயிகளுக்கே பாதிப்பு

## அநுர குமார சுட்டிக்காட்டு

அரசாங்கத்தின் மூர்க்கத்தனமான தீர்மானத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகள் வைப்பில் இருந்த பணத்தைக் கொண்டு விவசாயம் செய்யவில்லை.

கடன்பெற்று விவசாயம் செய்தார்கள் என்பதை அரசாங்கம்நினைவில்வைத்துக் கொள்ள வேண்டும். உடவளவ விவசாய பகுதிகளுக்கு நீர்விடுவிப்புதாமதிக்கப்பட்டுள்ளதால்விவசாயிகள் தான்பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அரசாங்கத்துக்குஎவ்வித பாதிப்பும் இல்லை. அரச தலைவர் மனசாட்சியுடன் செயற்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின்போது விசேடகூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

இயற்கைகாரணிகளால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டால்விவசாயிகள் வீதிக்கு இறங்கிப் போராடமாட்டார்கள்.

விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீரை விடுவிக்குமாறு வலியுறுத்தி உடவளவ விவசாயிகள் இரு வாரங்களுக்கு மேலாக சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

சமனல அணையில் இருந்து உடவளவ விவசாயப் பகுதிகளுக்கு நீரை விடுவிக்க கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற மாவட்ட விவசாய கூட்டங்களின் போது தீர்மானிக்கப்பட்டது.

தடையில்லாமல் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நீர் விநியோகிக்கப்படும் என அரசாங்கம் விவசாயிகளுக்கு வாக்குறுதி வழங்கியது. இதன் பின்னரே விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

வங்கியில் வைப்பு செய்த பணத்தைக் கொண்டு விவசாயிகள் விவசாயம் செய்யவில்லை. கடன்பெற்று, சொத்துக்களைஅடகுவைத்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்; ஈடுபடுகிறார்கள் என்பதை அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும். சமனல அணையில் நீர் இருந்த போதும் உடவளவ விவசாய வலயத்துக்குத் தேவையான நீரை அரசாங்கம் விடுவிக்கவில்லை.

நீர் விடுவிப்பு தாமதப்படுத்தப்பட்டமை தொடர்பில் மின்சார சபை, நீர்பாசனத் திணைக்களம் மாறுபட்ட கருத்துக்களைக் குறிப்பிடுகின்றன.

நீர் விடுவிப்புக்கு மின்சாரசபை இடமளிக்கவில்லை என விவசாயத்துறையுடன் தொடர்புடைய தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். மின்சார சபை அரசாங்கத்தின் ஒரு கட்டமைப்புக்குள் இல்லையா என்பது கேள்விக்கிடமாக உள்ளது.

விவசாயத்துக்குத் தேவையான நீரை விடுவிக்கக் கோரி விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் மீது பொலிஸார் தாக்குதலை மேற்கொண்டார்கள்.

பின்னர் நீர்விடுவிப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது. கடந்த ஒருவார காலத்தில் அரசாங்கம் ஒரு நாடகத்தை அரங்கேற்றி விவசாயத்தையும், விவசாயிகளையும் மீண்டும் நெருக்கடிக்குள்ளாக்கியது.

குறுகிய கால பயிர்ச் செய்கைக்கு உரிய நேரத்தில் நீர் பாய்ச்சாமல் இருந்தால் சிறந்த விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாது. உடவளவ வலய விவசாயிகள் தெங்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடவில்லை.

நெற்பயிர் செய்கையில் ஈடுபட்டார்கள் என்பதை அரசாங்கம் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். நெற்பயிர்ச் செய்கைக்குத் தேவையான நேரத்தில் நீரை வழங்காத காரணத்தால் எதிர்வரும்காலங்களில் இந்தப் பிரதேசத்தில் நெற்பயிர்ச் செய்கை 40 சதவீதமளவில் வீழ்ச்சியடையும். இதற்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். - என்றார். (05)



# முட்டை விலை 38 ரூபா வரை வரும் வர்த்தக அமைச்சர் நளின் தெரிவிப்பு

எதிர்வரும் வாரங்களில் 38 ரூபாவுக்கு சந்தையில் முட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். நாட்டுக்கு தினமும் தேவைப்படும் முட்டைகளில் 35 வீத குறைபாடுகாணப்படுவதாலே வெளிநாடுகளில் இருந்து முட்டை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவர்த்தகஅமைச்சர்நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஜகத்குமார எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அமைச்சரமேலும்தெரிவிக்கையில்-

முட்டை இறக்குமதி தற்காலிகமாக மேற்கொள்ளப்பட்டநடவடிக்கையாகும். நாட்டுக்குதினந்தோறும் தேவைப்படும்முட்டைகளில் தேசிய உற்பத்தியிலிருந்து கொள்வனவு செய்த போதும் மூன்று லட்சம் முட்டைகளுக்கான குறைபாடு காணப்படுகிறது. அந்த வகையில் நூற்றுக்கு முப்பது வீதமான குறைபாடு காணப்படுகிறது.

நூற்றுக்கு ஐந்து வீதம் அல்லது பத்து வீத குறைபாடு என்றால் எம்மால் அதை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். எனினும் 30 வீதம் என்பது இப்போதைக்கு எம்மால் நிவர்த்தி செய்து கொள்ள முடியாத காரணத்தாலேயே நாம் வெளிநாடுகளிலிருந்து முட்டையை இறக்குமதிசெய்யத் தீர்மானித்தோம்.

அதேபோன்று நாட்டுக்குப் போதுமான அளவில் முட்டையை உற்பத்தி செய்வதற்குஎமக்குஎவ்வளவு காலம் எடுக்கும் என்பது தொடர்பில் கால்நடை வளர்ப்பு மற்றும் விவசாய அமைச்சுக்களோடு நாம் பேச்சு நடத்தினோம்.

எனினும்அடுத்தவருடம் நடுப்பகுதி வரை அவ்வாறு முழுமையான தேவையை நிவர்த்திசெய்யமுடியாதுஎன சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

நாட்டில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான முட்டைகளைபெற்றுக்கொள்ளக் கூடிய உற்பத்தியாளர்கள் நான்கு பேரே உள்ளனர்.

அவர்களே பாரிய முட்டை உற்பத்தியாளர்கள். அவர்களே முட்டை வர்த்தகத்தில் பெரும் அழுத்தங்களை மேற்கொள்கின்றனர்.

நாம் தற்போது சதொச மற்றும் ஏனைய வர்த்தக சந்தைகளில் 35 ரூபாவுக்கு முட்டையை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்போது தேசிய உற்பத்தியாளர்களும் சிறு விலைக் குறைப்பை கடந்த வாரங்களில் மேற்கொண்டனர்.

65 ரூபா வரை சென்ற முட்டையின் விலை 50 ரூபா வரை குறைக்கப்பட்டது. சில இடங்களில் 44 ரூபாவுக்கும் முட்டை விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் ஒரு வாரமளவில் 38 ரூபா வரை அதன் சில்லறை விலை குறைவடையும் என எதிர்பார்க்கின்றோம்.

ஒருநாள் கோழிக்குஞ்சு கடந்த காலங்களில் 300 ரூபாவுக்கே விற்கப்பட்டது. எனினும் தற்போது அது 950 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அதனால் சிறு அளவில் முட்டைஉற்பத்திசெய்வோர் கோழிக்குஞ்சுகளை பெற்றுக் கொள்ள முடியாத வகையில் பாரிய உற்பத்தியாளர்கள் அதனைப் பெற்று வருகின்றனர். அதன் மூலம் முட்டை ஏகாதிபத்தியத்தை முன்னெடுப்பதே அவர்களின் செயற்பாடாக உள்ளது.

அதனால் ஜனாதிபதி, விவசாய அமைச்சு, வர்த்தகஅமைச்சு ஆகியவை இணைந்து நாம் பேச்சு நடத்தி கோழிக்குஞ்சுகளை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். அதன் மூலமே உற்பத்திகளை அதிகரிக்க முடியும். - என்றார். (05)

# நாடாளுமன்றில் பெண் ஊழியர்களுக்கு இடம்பெறும் பாலியல் வன்முறை குறித்து விசாரணை வேண்டும்

## ரோஹினி குமாரி கோரிக்கை

நாடாளுமன்றத்தின் உணவுப் பிரிவில் சில பெண்களுக்கும் மற்றும் யுவதிகளுக்கும் பாலியல் வன்முறைகள் இடம்பெறுகின்றன எனக் கடந்த சில நாள்களாகப் பத்திரிகைகளிலும் சமூக வலைத்தளங்களிலும் செய்தி வெளியிடப்பட்டு வந்தது.

இது தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்ள செயலாளர் நாயகம் விசேட குழுவொன்றை நியமித்திருக்கிறார். தற்போது அந்த விசாரணை இடம்பெற்று வருகிறது. அத்துடன் இந்த சம்பவம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சம்பந்தப்பட்டதல்ல. பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் உயர் அதிகாரிகளாலேயே இத்தபைள சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது அதிகாரிகள் சிலர் வன்முறைக்கு ஆளாகியவர்களிடம். அவ்வாறான எந்த சம்பவமும் இடம்பெறவில்லை எனத் தெரிவித்து

நாடாளுமன்றத்தின் உணவுப் பிரிவில் சில பெண்களுக்கு இடம்பெற்றிருக்கும் பாலியல் வன்முறையை மறைப்பதற்கும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெறவில்லை எனத் தெரிவித்து குறித்த பெண்களிடமிருந்து பலவந்தமாகக் கடிதம் ஒன்றில் கைச்சாத்திட்டு வருகின்றனர்.

அதனால் இது தொடர்பான விசாரணைகளை முறையாக மேற்கொண்டு வன்முறையை மேற்கொண்ட அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்விசேடகூற்றொன்றைமுன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

கையெழுத்துப் பெற்று வருகின்றனர். அதனால் இந்த விசாரணை நீதியாக இடம்பெறுமா இல்லையா என பாதிக்கப்பட்டவர்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பில் நேர்மையான விசாரணை மேற்கொண்டு வன்முறை மேற்கொண்டவர்களுக்கு எதிராகக் கடுமையான தண்டனையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு செயலாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கிறேன். ஏனெனில் இந்த சம்பவம் நாடாளுமன்றத்துக்கும் பெரும் வடுவாகும். – என்றார். இதற்கு சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் பதிலளிக்கையில், இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ள குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. அதன் விசாரணை சிறந்த முறையில் இடம்பெற்று வருகிறது. – என்றார். (05)

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ரணிலின் உரையில் புதிதாக எதுவுமில்லை

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் நீண்ட உரை ஆற்றியிருந்தார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி ஒரு புறத்தில் தமிழ்க் கட்சிகள் பலவும் வலியுறுத்த, பொலிஸ் அதிகாரங்களை வழங்கக்கூடாது என்று மறுபுறத்தில் சிங்களக் கட்சிகள் பல வலியுறுத்த சர்ச்சை ஏற்பட்டுள்ள நிலையில் அரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரை மீது ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. இந்தச் சர்ச்சைகளைக் கடந்து இந்த விடயத்தில் ஏதாவது ஒரு முன்னேற்றத்தை அடைவதற்கான வழி வரைபடம் குறித்து அவர் உரையாற்றக்கூடும் என்ற எதிர்பார்ப்பே அது. ஆனால், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை.

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் வடக்கு – கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்திலும் அரசுத் தலைவர் எவற்றைக் கூறினாரோ அவற்றின் தொகுப்புரையாகவே அவரது நேற்றைய நாடாளுமன்ற உரை அமைந்திருந்தது. அதற்கு மேல் புதிதாக ஒரு விடயம்கூட அதில் இடம்பெற்றிருக்கவில்லை. அந்த வகையில் அரசுத் தலைவரின் உரை ஏமாற்றம் தருவதாகவே அமைந்தது.

அரசமைப்பில் உள்ள 13ஐ நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு தனக்கும் நாடாளுமன்றத்திற்கும் உள்ளது, காவல்துறை அதிகாரம் உணர்ச்சிவசப்படுத்தும் விடயமாக இருப்பதால் அதனைத் தவிர்த்துவிட்டு ஏனைய விடயங்கள் குறித்துப் பேசித் தீர்வு கண்டு முன்னேறலாம், விவசாயம், கல்வி போன்ற துறைகளில் மாகாணங்களுக்கு முழு அதிகாரத்தையும் வழங்குவது, மாகாணத்தில் இருந்து மத்தி மீளப் பெற்றுக்கொண்ட அதிகாரங்களைத் திரும்பவும் மாகாணங்களுக்கே வழங்குவது, மாகாணத் தேர்தல் நடத்தப்படும்வரை ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்க சபை ஒன்றை அமைப்பது, அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அலுவலகத்தை உருவாக்கும் செயற்பாடு, வடக்கு கிழக்கு அபிவிருத்தி என்று அவரது உரையில் இடம்பெற்றிருந்த அனைத்து விடயங்களுமே ஏற்கனவே அவரால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள்தான். அதில் புதிய விடயங்கள் எதுவும் இல்லை.

அது மட்டுமல்ல 13ஆவது திருத்ததை நடைமுறைப் படுத்துவதற்கான வழி வகை குறித்தும் அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. அந்த முடிவை நாடாளுமன்றமே எடுக்கவேண்டும் என்று பந்தை நாடாளுமன்றத்தின் பக்கம் தள்ளிவிட்டு நகர்ந்துகொண்டார். அவரது உரையில் இடம்பெற்ற விடயங்களில் பலவற்றைக் குறித்தும் தமிழ்க் கட்சிகள் பலவும் பல எதிர்ப்புக்களையும் திருத்தங்களையும் கருத்து மறுப்புக்களையும் தெரிவித்திருந்தன. அதுபோன்றே சிங்களக் கட்சிகளும் எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தன. அவற்றில் காவல்துறை அதிகாரம் தொடர்பில் சிங்களக் கட்சிகளின் எதிர்ப்புக்கு மதிப்புக் கொடுத்து அது பற்றிப் பின்னர் பேசலாம் என்று கூறிய அரசுத் தலைவர், தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்புக்கள் குறித்துக் கண்டுகொள்ளவில்லை. குறிப்பாக, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று தமிழ் அரசுக் கட்சி உட்பட தமிழ்த் தேசியக் கட்சிகள் அறிவித்திருந்தன. ஆனால், அந்தக் கட்டமைப்பு ஏற்கனவே உருவாகத் தொடங்கிவிட்டது, அது தொடர்பில் விரைவில் நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவரப்படும் என்றே அறிவித்தார் ரணில் விக்கிரமசிங்க. அதுபோன்றே 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் அவை வலியுறுத்தியிருந்தன. ஆனால் காவல்துறை அதிகாரம் இல்லை என்று திட்டவட்டமாக மறுத்திருக்கிறார் அரசுத் தலைவர்.

இப்படி சிங்களக் கட்சிகளின் எதிர்ப்புக்கும் மதிப்பும் தமிழ்க் கட்சிகளின் எதிர்ப்புகளுக்கு எந்த மரியாதையும் வழங்காதும் தனது உரையை முழுமைப்படுத்தியிருக்கிறார் அரசுத் தலைவர். இதன் மூலம் சிங்கள, பௌத்த கண்ணோட்டத்தில் இருந்தே இந்தப் பிரச்சினையை ரணில் விக்கிரமசிங்க அணுகுகிறார் என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அந்த வகையில் அவரது உரை ஒரு தோல்வி உரையே.

அவர் இந்த விடயத்தை தனக்கு அரசியல் ஆதாயம் தேடும் ஒன்றாகப் பயன்படுத்தப் பார்க்கிறாரே தவிர உண்மையில் 13ஐ நடைமுறைப்படுத்தும் நோக்கத்தோடு செயற்படவில்லை என்கிற அயர்ச்சியையும் விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது அவரது உரை.



## மருந்துக் கொள்வனவில் என்ன நடக்கிறது?

வருணிகா

மருந்து, குளிசைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதில் பெரும் ஊழல் இடம்பெற்றுள்ளதாக அண்மையில் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனால் சுகாதாரத்துறை அமைச்சரைப் பதவி விலகுமாறும் வலியுறுத்தப்படுகின்றது. அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையின் உயர்மட்ட உறுப்பினர்கள் மருந்து வாங்கும்போது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்பதே குற்றச்சாட்டு. அவசர கொள்முதலைப் பெறுவது என்ற போர்வையில் இது செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) சட்டம் எண்: 5/2015 இன் பிரிவு 109இன் படி, அதிகார சபையில் பதிவு செய்யாமல் மற்றும் அதிகார சபையிடம் உரிமம் பெறாமல் எந்த மருந்தும் மருத்துவ சாதனமும் தயாரிக்கப்படவோ அல்லது இறக்குமதி செய்யப்படவோகூடாது. ஆனால், தேசிய பாதுகாப்பிற்காக, ஓர் உயிரைக் காப்பாற்ற அல்லது தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்க போன்ற அவரச வேளைகளில் மட்டுமே இந்த நடைமுறைக்கு விதி விலக்கு வழங்கப்படலாம்.

சட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் அப்படி இருந்தாலும், தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் 2021இல் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை, அரச பராமெடிக்கல் கவுன்சிலுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் 67 மருந்துகள் மற்றும் 140 மருத்துவ உபகரணங்களைப் பதிவுகள் இன்றி இறக்குமதி செய்வதற்கான அனுமதி எப்படி என்று கேள்வி எழுப்புகின்றது. பதிவு செய்யப்பட்ட விநியோகத்தர்கள் யாரும் இல்லாத காரணத்தாலேயே இப்படி நடந்து என்று கூறப்படுகின்றது. ஆனால், அதுஅதிகார சபையின் விதிகளுக்குப் பொருத்தமான காரணமல்ல.

கணக்காய்வுக்கண்டுபிடிப்புகளுக்கு பதிலளிக்கும் விதமாக, தேசிய கணக்காய்வு அவதானிப்புடன் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைதான் உடன்படவில்லை என்று கூறுகிறது. பதிவுசெய்யப்பட்ட விநியோகத்தர்கள் கிடைக்காதது, மருந்துகளை இறக்குமதி செய்யாதது மற்றும் அரசு மற்றும் தனியார் துறைகளில் மருந்து தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் ஏற்பட்ட நெருக்கடியான சூழ்நிலைகள் காரணமாகவே அவ்வாறு பதிவு விலக்குடன் மருந்துகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டதாக அது கூறுகின்றது.

தேசியகணக்காய்வுத்திணைக்களம் அந்தக்காரணங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை பின்பற்றும் நடைமுறை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இது முற்றிலும் எதிரானது என்று அது தெரிவிக்கின்றது.

நாட்டில் தற்போது தொற்றுநோய் அல்லது அவசரநிலைமை இல்லாத நிலையில், சுகாதார அமைச்சு ஏன் அவசரகால கொள்வனவுகளை தொடர்கிறது என்ற கேள்விகள் எழுந்துள்ளன. தரகுப்பணத்தை அனுபவிக்கும் நோக்கில் இந்த கொள்முதல் செய்யப்படுவதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தமது பெயர்களை வெளியிட விரும்பாத அமைச்சு வட்டாரங்கள், கொள்முதல் நடைமுறையைப் பின்பற்றாமல், சுகாதார அமைச்சும், அரச மருந்துக் கூட்டுத்தாபனம் (SPC) மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை (NMRA) ஆகியனவும் அவசரகால கொள்முதலை எவ்வாறு செய்தன என்பதை விவரிக்கின்றன.

மருத்துவப் பொருட்கள் பிரிவில் (MSD) போதுமான அளவு இருப்புக்கள் இருந்தாலும். அவசர கொள்முதல்' பிரிவின் கீழ் கிடைக்கும் மருந்துகள் ஏன் வாங்கப்படுகின்றன என்று நாங்கள் விசாரிக்கும் போதெல்லாம், டெண்டர் விடப்பட்டால், நாட்டிற்குத் தேவையான இருப்புகளைப் பெற குறைந்தது 10 மாதங்களுக்கு மேல் ஆகும், அதனால்தான் அவசரநிலை கருதி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் நிலைப்பாடு அப்படியிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டு ஆண்டிபயாடிக் மருந்தாகப் பயன்படுத்தப்படும் செஃபுராக்ஸைம் சோடியம் இன்ஜெக்ன் (Cefuroxime Sodium Injection) வாங்குவதற்கான டெண்டர் எவ்வாறு ரத்து செய்யப்பட்டது என்பதை நிரூபிக்கும் அதிகாரபூர்வ ஆவணங்களின் விவரங்கள் சில தரப்புகளிடம் உள்ளன. குறைந்த விலைக்கு கேள்வி முன்வைத்தவருக்கு அதனை வழங்கும்படி நிதியமைச்சு அறிவுறுத்திய போதிலும், அமைச்சரவை அமைச்சர்கள் அதிக விலைக்குக் கேள்வியை முன்வைத்தவருக்கு ஆதரவாக இருந்தனர்.

அதிகஏலம்எடுத்தவருக்கும்குறைந்த ஏலம் எடுத்தவருக்கும் இடையே உள்ள மொத்த வேறுபாடு அண்ணளவாக ரூ. 400 மில்லியனாக இருந்தது, ஆனால் இந்த டெண்டரை ரத்துச் செய்வதன் மூலம் மற்றொரு அவசர கொள்முதல் செய்யப்பட்டு இரண்டு நிறுவனங்களுக்கு டெண்டர் வழங்கப்பட்டது. அதில் ஒன்று முந்தைய அதிக ஏலதாரரின் உள்ளூர் முகவர். ரத்துச் செய்யப்பட்ட டெண்டரில் மிகக் குறைந்த ஏலதாரருக்கு ஒப்பந்தம் வழங்காததால் நாட்டுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பு தோராயமாக ரூ. 1,200 மில்லியன்.

நாடு நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும்போது, வரி செலுத்துவோர் மீது சுமையாக ரூ. 1,200 மில்லியனுக்கும் அதிகமான செலவில் ஒரு பொருளை வாங்குவது நியாயமானதா? உண்மையிலேயே கேள்வி எழுகிறது அல்லவா?

செஃபுராக்ஸைம் சோடியம் இன்ஜெக் ன் (Cefuroxime Sodium Injection) வாங்குவதற்கான கேள்வி கோரலின் போது குறைந்த விலையை முன்மொழிந்த ஏலதாரருக்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு அந்த ஒப்பந்தத்தை வழங்குமாறு மே 5 நிதி அமைச்சர் பரிந்துரைத்தார். அந்தப் பரிந்துரையை சுகாதாரத்துறை அமைச்சர் மே 8 அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக அமைச்சரவையில் முன்வைத்தார். ஆனால், அமைச்சரவை அதனை ஏற்க மறுத்து அந்த கேள்வி கோரலையே ரத்துச் செய்வது என்று முடிவெடுத்தது.

அரச மருந்தக களஞ்சியத்தில் இருப்பு இல்லை மற்றும் ஏலதாரர்களின் விலைகளில் இருந்த பெரும் வேறுபாடு என்பவற்றைக் கருத்தில்கொண்டே குறைந்த விலையில் கேள்வி சமர்ப்பித்தவருக்கு அதனை வழங்க நிதி அமைச்சர் பரிந்துரைத்திருந்தார். சுகாதார அமைச்சர், அமைச்சரவைக்கு முன்வைத்த பத்திரத்தில், தரமான மருந்து விநியோகம் தொடர்பான தனது கருத்து தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அறிக்கையின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவித்திருந்தார். ஆனால், கூடுதல் கேள்வியைச்சமர்ப்பித்தஏலதாரர் அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டவருமல்லர், அதிகார சபை நிபந்தனைக்களுக்குக் கட்டுப்பட்டவருமல்லர். இருந்த போதும் அந்த நிறுவனத்தின் உள்ளூர் முகவருக்கே அது தொடர்பான கொள்வனவுக் கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

கேள்வி கோரல் தெரிவு தொடர்பான அமைப்புக்களால் தெரிவு செய்யப்பட்ட குறைந்த கேள்வி முன்வைப்பு ஒரு குளிகைக்கு 0.251 டொலர். அதுவே மற்றைய நிறுவனத்தால் குளிகைக்கு 0.76 என்ற அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டது. இதன் மூலம் இரு நிறுவனங்களுக்கும் இடையிலான விலை வேறுபாடு 0.509 டொலர். 25 லட்சம் குளிகைகளுக்கான மொத்த விலை வித்தியாசம் 600 மில்லியன் டொலர்.

இது ஓர் உதாரணம் மட்டுமே. இந்த இடைப்பட்ட பணத்தில் எவ்வளவு தரகுப் பணமாக வழங்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்த முடியாது. ஆனாலும் இவ்வளவு விலை வேறுபாட்டுக்கு மத்தியில் ஏன் மருந்துகள் விதிமுறைகளை மீறி அவசரமாக அதிக விலைக்குக் கொள்வனவு செய்யப்படுகின்றன என்கிற கேள்வியைத் தவிர்க்க முடியாது.

**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் (NMRA) சட்டம் எண்: 5/2015 இன் பிரிவு 109இன் படி, அதிகார சபையில் பதிவு செய்யாமல் மற்றும் அதிகார சபையிடம் உரிமம் பெறாமல் எந்த மருந்தும் மருத்துவ சாதனமும் தயாரிக்கப்படவோ அல்லது இறக்குமதி செய்யப்படவோகூடாது. ஆனால், தேசிய பாதுகாப்பிற்காக, ஓர் உயிரைக் காப்பாற்ற அல்லது தொற்றுநோய்கள் பரவுவதைத் தடுக்க போன்ற அவரச வேளைகளில் மட்டுமே இந்த நடைமுறைக்கு விதிவிலக்கு வழங்கப்படலாம்.**




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடுவதுடன் கல்வி மற்றும் ஊட்டச்சத்தில் முதலீடு செய்க

## பெற்றோர்களுக்கு இலங்கையில் சச்சின் அறிவுரை











பிள்ளைகளுடன் நேரத்தை பெறுமதியாக செலவிடுவதுடன் கல்வி மற்றும் ஊட்டச்சத்தில் பிள்ளைகளுக்கு முதலீடு செய்வதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தில் மட்டுமல்லாது ஒவ்வொரு நாட்டினது எதிர்காலத்திலும் நாம் முதலீடு செய்கின்றோம் என்று இந்திய கிரிக்கெட் ஜாம்பவானும் யுனிசெப்பின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான நல்லெண்ணத் தூதுவருமான சச்சின் டென்டுல்கர் தெரிவித்தார்.

அத்துடன் பாடசாலை மாணவர்கள் மிகுந்த மன உறுதியுடன் இருப்பதுடன் சிறந்த எதிர்காலத்துக்கான அவர்களின் நம்பிக்கையும் வலுவாகக் காணப்படுகின்றது. அவர்கள் தங்களது இலக்குகளை அடைவதற்குத் தொடர்ந்தும் நாம் உதவ வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

யுனிசெப்பின் தெற்காசியப் பிரதந்தியத்திற்கான நல்லெண்ணத் தூதுவர் என்ற ரீதியில் சச்சின் டென்டுல்கர் இலங்கைக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்நிலையில், அவர் சப்ரகமுவ மாகாணத்தில் யுனிசெப்பினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித்திட்டத்தை பார்வையிட்டார்.

அத்துடன் அங்குள்ள சில பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்ட சச்சின் டென்டுல்கர், பெருந்தோட்டத்துறைப் பகுதிகளில் வாழும் மக்களையும் சந்தித்து அவர்களின் குறைநிறைகளை கேட்டறிந்துகொண்டார்.

சச்சின் தனது இலங்கைக்கான நல்லெண்ண விஜயத்தை மற்கொண்டுள்ள நிலையில், செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு அவரது விஜயம் குறித்து கூறுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் உள்ள பாடசாலை மாண வர்கள் சிலருடன் நான் கலந்துரையாடிய போது அவர்கள் என்னுடன் பலவிடயங்களைப்பகிர்ந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்கள் மிகுந்த மன உறுதியுடன் இருப்பதுடன் சிறந்த எதிர்காலத்துக்கான அவர்களின் நம்பிக்கையும் வலுவாகக் காணப்படுகின்றது. அவர்கள் தங்களது இலக்குகளை அடைவதற்கு தொடர்ந்தும் நாம் உதவ வேண்டுமென சச்சின் குறிப்பிட்டார்.

சவால் மிக்க சூழலுக்கு மத்தியிலும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் எடுக்கும் முயற்சிகளை பாராட்டினார் சச்சின்.

குழந்தைகள் தங்கள் முழுமையான திறனை அடைவதற்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு மற்றும் தரமான கல்வி என்பன அவசியமாகின்றன. அவர்களின் கல்வி மற்றும் ஊட்டச்சத்தில் முதலீடு செய்வதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தில் மட்டுமல்லாது ஒவ்வொரு நாட்டினது எதிர்காலத்திலும் நாம் முதலீடு செய்கின்றோம் என்றும் சச்சின் குறிப்பிட்டார்.

இங்கு மேலும் உரையாற்றிய சச்சின் டென்டுல்கர் -

அவர் முத்தையா முரளிதரனுடன் கிரிக்கெட் விளையாடிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். நான் படசாலைக்காலங்களில் குறும்புத்தன மானவன். இலங்கைக்கான விஜயம் குறித்து பெருமையடைகின்றேன்.

நான் இலங்கைக்கு வந்து றுவன்வெல்ல பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுடன் எனது நேரத்தை செலவுசெய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. அத்துடன் தேயிலை தோட்ட மக்களை சந்தித்து அவர்களின் குறை நிறைகளை கேட்டறிய சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து நான் அறிந்து கொண்டேன். அவர்கள் பிள்ளைகளை வளர்ப்பதற்கு சிரமப்படுவதையும் நான் அவதானித்தேன். பல குடும்பங்கள் பொருளாதார சிக்கல்களால் ஊட்டச்சத்துள்ள தரமான உணவுகளை பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பதில் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

கல்வி முக்கியமானது. இது அனைத்துசிறுவர்களின்வாழ்க்கைக்கும் அத்திபாரமாகும். போசாக்குள்ள உணவு மற்றும் கல்வி ஆகியன எமது சிறுவர்களின் எதிர்காலத்துக்கு பிரததானமானவைகளாகும். சுகாதார பழக்கவழக்கங்கள் குறித்து நாம் பிள்ளைகளுக்கு அறிவுரை கூற வேண்டும்.

கொவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் நாம் பெரும் சவால்களை எதிர் கொண்டுள்ளோம். வேலைத்தளங்கள் மூடப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டன. கல்வியில் மாணவர்கள் பெரும் பின்னடைவை எதிர்கொண்டனர். பல குடும்பங்கள் பல சவால்களை சந்திக்க நேர்ந்தது. இதனால் பல அச்சுறுத்தல்களை சந்தித்துள்ளோம்.

ஒருகுழந்தை கருவாக உருவானது முதல் உள்ள ஆயிரம் நாள்களில் பெரும்பாலான 80வீதமான வளர்ச்சிகள் இடம்பெறுகின்றன. அந்த வகையில் முதல் 2 வருடங்களும் மிக முக்கியமானவை. இந்தக் காலகட்டத்தில் நாம் ஊட்டச்சத்து தொடர்பான விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டும். இந்த விடயத்தில் பெற்றோர்கள், பெரியோர்கள் கரிசனை கொள்ளாது இருக்கின்றனர்.

குழந்தைகளுடன் மேலதிகமாக நேரத்தை செலவிடுங்கள். அவர்களுக்கு அன்பு, பாசத்தை ஊட்டுங்கள். அவர்களுடன் விளையாடுங்கள், அவர்களுடன் அரட்டை அடியுங்கள், அரவணைத்து தழுவுங்கள் இவ்வாறான செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவை எமது இணைப்பை தக்கவைத்துக்கொள்ளவதற்கு. இவையே பிள்ளைகளின் 80 வீதமான மூளை வளர்ச்சிக்கு மிகவும் காரணமாக அமைந்துள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டார்.

யுனிசெப் அமைப்பின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான முதலாவது நல்லெண்ணத் தூதுவராக சச்சின் டென்டுல்கர் 2013 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அன்றிலிருந்து தெற்காசியாவிலுள்ள சிறுவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு சச்சின் பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிரிக்கெட் கட்ச் - அப் என்ற அமர்வில் பங்குபற்றிய இளைஞர்கள் குழுவுக்கு வளர்ச்சி பெறுவது, தடைகளைத் தாண்டி முன்னேறுவது, இலக்குகளை அடைவதில் எவ்வாறு உறுதியாக இருப்பது போன்ற விடயங்களில் தனது அனுபவத்தை சச்சின் டென்டுல்கர் பகிர்ந்து கொண்டார்.

இதேவேளை, நாட்டில் பொருளாதாரம் படிப்படியாக மீட்சிபெற்று வரும் நிலையில், சிறுவர்கள் உள்ளடங்கலாக 3.9 மில்லியன் பேர் போதிய உணவு இன்றியும் 4.8 மில்லியன் பேர் கற்பதற்கும் சிரமங்களுக்குள்ளாகியுள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவிக்கின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் நாடளாவிய ரீதியிலுள்ள 1400 பாடசாலைகளில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான முன்பள்ளி மாணவர்களுக்கு ஊட்டமளிக்கும் யுனிசெப்பின் மதிய உணவுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் பெருந்தோட்டப் பகுதிகளில் இரண்டு வயது வரையிலான பிள்ளைகள் உள்ள ஒரு லட்சத்து 10 ஆயிரம் குடும்பங்களுக்கு குழந்தைகளுக்குத் தெவையான ஊட்டச்சத்துள்ள உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்ய யுனிசெப் நிதியுதவி வழங்கி வருகின்றது. (05)

# தமிழர் பிரதேசங்களைத் திட்டமிட்டு பௌத்த பிரகடனம் செய்கின்றமை வேதனைக்குரியது

## ஆறு.திருமுருகன் வருத்தம்



இலங்கையில் உள்ள தமிழர் பிரதேச இடங்களை திட்டமிட்டு பௌத்த இடங்களாக பிரகடனப்படுத்துவது வேதனைக்குரியது என இந்து சமய சங்கங்கள் மற்றும் அறக்கட்டளைகளின் கூட்டமைப்பு சார்பாக அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு - இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு தமிழர்களின் பாரம்பரிய அடையாளச்சின்னங்களை பௌத்த அடையாள இடங்களாக மாற்ற நினைப்பது மிகுந்த வேதனை தருகிறது. கிழக்கில் திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்று சைவ மக்களின் புனித தீர்த்தமாக பலநூறு வருடங்களாக பேணிப்பாதுகாக்கப்பட்டது.

சைவசமயத்தை பெரிதும் நேசித்த இலங்கை வேந்தன் இராவணனோடு தொடர்புடைய இப்புனித தீர்த்தம் இன்று தொல்லியல் திணைக்களத்தின் பெயரால் அபகரித்துள்ளமை அநீதியான செயலாகும். தொடர்ந்து தொன்மை வாய்ந்த சைவ ஆலயங்களை திட்டமிட்டு அபகரிக்க நினைப்பது அதர்மச் செயலாகும்.

தற்போது பறளாய் முருகன் கோவிலில் உள்ள அரசமர விருட்சத்தை சங்கமித்தை வரலாற்றோடு தொடர்புபடுத்தி வர்த்தமானி வெளியிட்டுள்ளமை சைவ மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்துள்ளது. சைவ நிறுவனங்களையோ, வடக்கில் உள்ள பல்கலைக் கழக அறிஞர்களையோ தொடர்பு கொள்ளாமல் தொல்லியல் திணைக்களம் புதிய பிரகடனங்கள் செய்வது கவலையளிக்கிறது. கீரிமலைப் புனித தீர்த்த கேணியை திடீரென தொல்லியல் திணைக்களம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பதுமிகவும் தவறான செயலாகும்.

தெல்லிப்பழை கிராம முன்னேற்றச் சங்கம், வல்லிபுரம் என்ற பெரியவரின் நிதியுதவியுடன் 1916ஆம் ஆண்டு தூர்வைக் குளமாக இருந்த இக்கேணியை பொலிகலால் கட்டி பாதுகாத்தது. இன்றுவரை வல.ஸ்ரீவடக்குப்பிரதேசசபை குளத்தைப் பாதுகாப்பதுடன் காவலர்களை நியமித்து கண்காணித்துவருகிறார்கள்.

திணைக்களத்திற்கு உரித்தாக பிரகடனம் செய்திருப்பது நீதியற்ற செயல். எனவே ஜனாதிபதி தொல்லியல் திணைக்களத்தின் மேற்குறித்த பிரகடனங்களை மீளப்பெறுவதற்கு உடன் நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று சைவமக்களின் சார்பில் அகில இலங்கை இந்து மாமன்றம் தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறது. தாங்கள் இவ்விடயத்தில் உடன் அக்கறை எடுத்து ஆவனசெய்யுமாறு வேண்டுகிறோம். - என்றுள்ளது. (05)

# கஞ்சா வழக்கில் கைதான நபர்களை பொலிஸ் காவலில் எடுத்து விசாரனை

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு பகுதிகளில் கஞ்சாவுடன் கைதான இருவரை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் நீதிமன்றில் அனுமதி பெற்றுள்ளனர்.

பொன்னாலை பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு 227 கிலோ 915 கிராம் கேரளா கஞ்சாவுடன் ஊர் இளைஞர்களால் மடக்கி பிடிக்கப்பட்டு, வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபரை 07 நாள்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் அனுமதி பெற்றுள்ளனர்.

அதேவேளை, காங்கேசன் துறை கடற்பரப்பில் கடற்படையினரால், 54 கிலோ 300 கிராம் கஞ்சாவுடன் கைதான நபர் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், 03 நாள்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் அனுமதி பெற்றுள்ளனர்.

கடந்த காலங்களில் கஞ்சாவுடன் கைதாகும் நபர்களை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து 24 மணி நேரத்துக்குள் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தி விடுவார்கள்.

இந்நிலையில் குறித்த இருசம்பவங்கள் தொடர்பில், கைதானவர்களுக்கு பின்னால் இயங்கும் வலையமைப்பு தொடர்பில் விரிவான விசாரணைகளை முன்னெடுக்கும் முகமாகவே, பாதுகாப்பு அமைச்சின் விசேட அனுமதியுடன் அவர்களை 24 மணி நேரம் கடந்தும் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் நீதிமன்றில் அனுமதி பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# மதுவரி திணைக்கள அதிகாரியின் வீடு மீது பெற்றோல் குண்டு வீச்சு

## சாவகச்சேரியில் சம்பவம்

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மதுவரி திணைக்கள பொறுப்பதிகாரியின் வீட்டுக்கு மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட வன்முறை கும்பல் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டு பெற்றோல் குண்டை வீசி விட்டு தப்பி சென்றுள்ளது.

கருகம்பனை பகுதியில் உள்ள அதிகாரியின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மோட்டார்சைக்கிளில் சென்ற வன்முறை கும்பல், வீட்டின் கதவை கொத்தி உடைக்க முற்பட்டதுடன், ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து உடைத்து விட்டு, ஜன்னல் ஊடாக பெற்றோல் குண்டை வீட்டினுள் வீசி விட்டு தப்பி சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய ஊழல் எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர் இலங்கை வருகை

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உலகளாவிய ஊழல் எதிர்ப்பு ஒருங்கிணைப்பாளர் ரிச்சர்ட் நெபிவ் கொழும்பிற்கு விஜயம் செய்துள்ளளார் எனக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்துள்ளது.

அவருடன் வருகைதந்த தூதுக்குழுவில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊழல் எதிர்ப்பு ஆய்வாளர் டிலான் ஐகென்ஸ் அடங்குவார்.

கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாங்கம், எதிர்க்கட்சி, சர்வதேச நாணய நிதியம், தனியார் துறை மற்றும் சிவில் சமூகம் ஆகிய-வற்றைச் சேர்ந்த பல்வேறு தரப்பினர்களையும் நெபிவ் சந்திப்பார்.

ஊழலை ஒழிப்பதற்கான முயற்சிகள், மற்றும் நாட்டிலுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் மற்றும் எதிர்கால ஒத்துழைப்பிற்கான சாத்தியக்கூறுகள் என்பன தொடர்பில் ஆராய்வதே அவரது வருகையின் நோக்கமாகும். (05)

# நவகமுவவில் பெண்களுடன் தேரர் பொலிஸாரால் கைது

நவகமுவ, பொமிரிய பிரதேசத்தில் வீடு ஒன்றில் விகாரையை நடத்தி வந்த பல்லேகம சுமன என்ற தேரர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியைச் சேர்ந்த சில பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டனர்; எனப் பிரதேச மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் தேரர் பொலிஸுக்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 6 ஆம் திகதி, விகாரை ஒன்றின் பெயரில் இயங்கும் வீட்டின் அறையில் ஒரு பெண்ணையும் யுவதியையும் பிக்கு ஒருவர் மிகவும் நெருக்கமாக வைத்திருந்தபோது, பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டனர்.

இந்த சம்பவம் வீடியோவாக எடுக்கப்பட்டு சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை* சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# பணச்சலவைத் தடுப்பு மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தலை முறியடிக்க புதிய தேசிய கொள்கை

## அரசாங்கம் அறிவிப்பு

நாட்டின் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஸ்தாபிக்கப்பட்டுள்ள, இலங்கை மத்திய வங்கியின் திணைக்களமாக இயங்குகின்ற நிதிசார் உளவறிதல் பிரிவால் பணம் தூய்தாக்கல், பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல் மற்றும் சட்டத்தில் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள ஏனைய சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்புக்களை தடுப்பதற்காக சர்வதேச தரக்கட்டளைகளை தயாரிக்கின்ற சர்வதேச அரசாங்கங்களுக்கிடையிலான நிதிச்செயலாற்றுகை செயலணி, அனைத்து நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய 40 பரிந்துரைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கமைய இலங்கை, நிதிச்செயலாற்றுகை செயலணியின் பரிந்துரை களுக்கமைவாக செயற்படுகின்றதா என்பதை நிதிச்செயலாற்றுகை செயலணியின் பிராந்திய நிறுவனமான பணம் தூய்தாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் வலயக் குழுவால் மதிப்பிடப்படும். குறித்த குழுவால் மேற்கொள்ளப்படும் பரஸ்பர மதிப்பீடு 2025 மார்ச் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதற்காக மிகச்சிறந்த முறையில் இலங்கையின் நிலைமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் 2023 - 2028 பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களை முறியடிப்பதற்கான இலங்கையின் தேசிய கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் பணம் தூய்தாக்கல் தடுத்தல் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளித்தல்களைத் தடுத்தல் பற்றி அடையாளங்காணப்பட்டுள்ள பலவீனங்களுக்கு தீர்வுகளாக அந்தந்த நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் உள்ளடங்கியதான செயற்பாட்டுத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# உவர் நீர் இறால் வளர்ப்புக்கு அம்பாந்தோட்டையில் வாய்ப்பு

உவர்நீர்இறால்வளர்ப்புக்காக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசுக்குச் சொந்தமான காணியொன்றை இரண்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகால குத்தகையின் அடிப்படையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான வர்த்தக ரீதியான நீர்வாழ் உயிரினவளர்ப்பான உவர்நீர் இறால் வளர்ப்பு மூலம் 2021 ஆம் ஆண்டில் 14 ஆயிரத்து 414 மெற்றிக்தொன் உற்பத்திகள் பெறப்பட்டுள்ளதுடன், அதனை 2025 ஆண்டளவில் 50 ஆயிரம் மெற்றிக்தொன்களாக அதிகரிப்பதற்கும், அதன்மூலம் 65 ஆயிரம் 500 மில்லியன் ரூபாக்கள் வெளிநாட்டு செலாவணியாக ஈட்டுவதற்கும் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

எனினும், நீர்வாழ் உயிரின வளர்ப்புக்களுக்கு எமது நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட காணிகள் காணப்படுவதால் நீர்வாழ் உயி ரின வளர்ப்புக்களை மேலும் விரிவாக்கம் செய்வதில் சவால்கள் உள்ளன. இந்தச்சவாலுக்கு முகங்கொடுப்பதற்காக தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியில் உயரிய விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நவீன தொழிநுட்பங்கள் அறிமுகப்படுத்தல் போன்ற பல படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள அரசுக்குச் சொந்தமான 218 ஏக்கர் மற்றும் 30 பேர்ச்சர்ஸ் காணி குறுகியகால வளர்ப்பு வட்டத்தில் விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வனமிவகை இறால்வளர்ப்பு பொருத்தமானதெனக்கண்டறியப்பட்டுள்ளது.

இக்காணியை, அரச பெறுகைச்செயன்முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள டப்ளிவ்.எஸ்.ஆர்.லோவ் அன்ட கே.எம்.என்.அக்டா சர்விஸ் (தனியார்) கம்பனி, மற்றும் நேன்போ ஃபியூட்ஸ் (தனியார்) கம்பனிக்கு 109 ஏக்கர் 15 பேர்ச்சர்ஸ் வீதம் அரச விலை மதிப்பீட்டின் அடிப்படையில் 30 வருட நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக கடற்றொழில் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# கசிப்பு கடத்தல் மற்றும் உற்பத்தியில் ஈடுபட்ட 4 பேர் மட்டக்களப்பில் கைது



மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை இல்லாதொழிக்கும் பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மற்றும் கசிப்பு கடத்தி சென்ற 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து 200 லீற்றர் கோடா, 50 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து திக்கோடை பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவரை கைது செய்ததுடன் 200 லீற்றர் கோடா 50 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நெல்லிக்காட்டு பிரதேசத்தில் வீடு ஒன்றில் இருந்து இரு மோட்டர்சைக்கிளில் கசிப்பு உற்பத்தி கலன்களில் 140 லீற்றர் கோடாவை கடத்திச் சென்ற இருவரை பொலிஸார் வீதியில் வைத்து கைதுசெய்ததுடன் இருவர் மோட்டார் சைக்கிளில் கலனின் கொண்டு சென்ற கோடா மற்றும் கையடக்க தொலைபேசி என்பவற்றை கைவிட்டு தப்பி சென்றுள்ளனர். இந்த இரு வெள;வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்ட நான்கு பேரையும் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)


# கசிப்பு, கோடாவுடன் யாழில் பெண் கைது

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, சங்கானை பகுதியில் செவ்வாய்க்கிழமை கசிப்பு மற்றும் கோடா என்பவற்றுடன் 41 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடம் இருந்து 5 லீற்றர் கசிப்பு மற்றும் 20 லீற்றர் கோடா என்பன மீடகப்பட்டுள்ளன. குறித்த பெண் முன்னரும் ஒரு தடவை கசிப்புடன் கைதாகியவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட பெண்ணை, மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சிறுமியைக் கர்ப்பமாக்கிய இளைஞன் வாகரையில் கைது



மட்டக்களப்பு வாகரையில் 15 வயது சிறுமியை கர்ப்பமாக்கிய 18 வயதுடைய இளைஞன் ஒருவரை செவ்வாய்க்கிழமை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் 15 வயதும் 8 மாதம் கொண்ட சிறுமி ஒருவரை 18 வயதுடைய இளைஞனை காதலித்து வந்த நிலையில், சிறுமியை 3 மாத கர்ப்பமாக்கியதையடுத்து அவர்கள் இருவரையும் அவர்களது பெற்றோர் ஒன்றிணைத்து வைத்ததையடுத்து இருவரும் கணவன் மனைவியாக குடும்பமாக வாழ்ந்து வந்துள்ளனர்.

இது தொடர்பாக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவல் பிரகாரம் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 18 வயது இளைனுக்கு எதிராக கடந்த முதலாம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து, அவர்கள் இருவரும் ஒளிந்திருந்த நிலையில் சிறுமியை கர்ப்பமாக்கிய 18 வயது இளைஞனை சம்பவதினமான செவ்வாய்க்கிழமை கைதுசெய்ததுடன் சிறுமியை வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட இளைஞனுக்கு எதிராக சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட குற்றசாட்டின் கீழ் வழக்கு தாக்குதல் செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)



# காரைதீவு விபுலானந்தா மத்தி தேசிய மட்டத்திற்குத் தெரிவு

## மாகாண பூப்பந்தாட்டத்தில் 2ஆம் இடம்











(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் நடாத்தி வரும் பெரு விளையாட்டுகளுக்கான போட்டியில் பூப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி இரண்டாம் இடத்தை பெற்றுதேசியமட்டபோட்டிக்கு தெரிவாகியுள்ளது.

திருகோணமலையில் கடந்த மூன்று நாட்களாக நடந்த கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் பூப்பந்தாட்ட போட்டியில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி அணி 20 வயதிற்குட்பட்ட போட்டியில் இரண்டாமிடம் பெற்றுகொண்டது.

இதன்போது ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை வெற்றி கொண்டு அடுத்த சுற்றில் அம்பாறை டி.எஸ். சேனநாயக்கா தேசிய பாடசாலை வெற்றி கொண்டு அரை இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி வெற்றி கொண்டு இறுதி போட்டிக்கு செவ்வாய்க்கிழமை இறுதி போட்டிற்கு தெரிவு செய்யப்பட்டனர். நேற்று விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப்போட்டியில்திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியிடம் தோல்வியுற்று இரண்டாமிடம் பெற்றுகொண்டனர். இதன் மூலம் தேசிய போட்டிக்கு விபுலானந்தபூப்பந்தாட்ட அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# எம்மிடம் அதிகாரங்களைத் தந்தால் நாமே பிரச்சினைகளை தீர்ப்போம்

## சபையில் சாணக்கியன் சுட்டிக்காட்டு



எமக்கான அதிகாரங்கள் எமது கைகளில் தரப்பட்டால் மாத்திரமே எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமைச்சரவையில் தமிழர் ஒருவர் அமைச்சராக அங்கத்துவம் வகித்தாலும் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது. இந்தக் காரணத்தினாலேயே, தமிழர்கள் அதிகாரப் பகிர்வைக்கோருகின்றார்கள்.

உண்மையில் மீன்பிடித்துறை அமைச்சரிடம் கிழக்கு மாகாணம் தொடர்பாகப் பல பிரச்சினைகளை முன்வைத்திருந்தாலும் இதுவரை அவற்றுக்கான தீர்வுகள் கிடைக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பில் அதிகூடிய மீன்பிடித் தொழிலாளர்கள் இருக்கின்றனர். எனவே, அவர்களது வாழ்வாதாரப் பிரச்சினைகள்உடனடியாகத் தீர்க்கப்பட வேலண்டும்.

உரிய துறைக்கு ஒரு தமிழரே அமைச்சராக இருக்கின்றார்.

எனவே, ஒரு அமைச்சரவை அந்தஸ்து இருந்தும்கூட இதுவரை தீர்வுகள் பெறப்படவில்லை என்பதால்தான் நாங்கள் அதிகாரப்பரவலாக்கல்மூலம் எமக்கான அதிகாரங்களைக் கோருகின்றோம்.

எமது கரங்களில் அதிகாரங்கள்தரப்பட்டால்நாமே எமது பிரச்சினைகளைப் பார்த்துக்கொள்ள முடியும்.

- என்றார்.

# நானுஓயாவில் கத்திக்குத்துக்கு இலக்கான வர்த்தகர் உயிரிழப்பு

கத்திக்குத்துக்கு இலக்கான வர்த்தகர் ஒருவர் சிகிச்சை பயனின்றிஉயிரிழந்துள்ளார்.

நானுஓயா நகரில் திங்கட்கிழமை காலை இடம் பெற்றவாக்குவாதசம்பவத்தை அடுத்து இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் வர்த்தகர் ஒருவர் படுகாயம் அடைந்து நுவரெலியா மாவட்டவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். குறித்த வர்த்தகர் சிகிச்சை பலனின்றி நேற்று (09) காலை உயிரிழந்துள்ளார்.

நானுஓயாபிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதுடைய கருப்பையா இராமசுந்தரம் என்ற வர்த்தகரே உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம்வர்த்தக நிலையத்தின் வாடகை மற்றும் பணம் கொடுக்கல் - வாங்கல் காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியதால்இடம்பெற்றதுஎன்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவத்தில் கத்தியால் குத்தியவர்கள் சகோதரர்கள் எனவும், அவர்கள் இருவரும் தாமாகவே நானுஓயா பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்கள் எனவும் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திலீபனின் நினைவேந்தல் முன்னேற்பாடு தொடக்கம்

நல்லூர் திருவிழாவும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலும் நெருங்கி வரும் நிலையில், நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள பகுதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் புனரமைக்கப்படுகிறது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து புனரமைப்பு பணிகளை முன்னெடுக்கின்றனர். (05)



# மோ. சைக்கிள் விபத்து இளைஞர் பரிதாப சாவு

## கட்டைக்காட்டில் சம்பவம்

வடமராட்சி கட்டைக்காடு பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 22 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் முள்ளிக்குளம் மருசுகட்டி மன்னார் பகுதியைச் சேர்ந்த செபமாலை நிரோசன் எனத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞரின் சடலம் மந்திகை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# பொய்ப் பிரசாரம் செய்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை உறுதி

## எச்சரிக்கின்றார் நாமல் எம்.பி.

மின் கட்டணம் செலுத்த வேண்டும் என எனக்கு எதிராகச் சிலர் பொய்ப் பிரசாரம் செய்கின்றனர். குறித்த நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

-இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

மின்சார சபைக்குத் தான் எழுதிய கடிதத்துக்கும் இதுவரை பதில் வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் திருமண வைபவத்துக்காக இலங்கை மின்சார சபை விநியோகித்த மின்சாரத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை இன்னும் செலுத்தப்படவில்லை என மின்சார சபை தெரிவித்திருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) மாகாண சபை உறுப்பினர் நளின் ஹேவகே தாக்கல் செய்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்குப் பதிலளிக்கும் வகையில் இலங்கை மின்சார சபை இவ்வாறு குறிப்பிட்டிருந்தது.

2019 ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை வீரகெட்டிய வீட்டில் நடந்த திருமண வைபவத்துக்கு வழங்கிய தற்காலிக மின் விநியோகத்துக்காக 26 இலட்சத்து 82 ஆயிரத்து 246 ரூபா செலுத்தப்பட வேண்டும் எனவும் இலங்கை மின்சார சபை கூறியிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் கோரிக்கைக்கு அமைய இவ்வாறு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், இந்த அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, இலங்கை மின்சார சபை அவ்வாறான எந்தவொரு மின் கட்டணப் பட்டியலையும் தங்களுக்கு இதுவரை அனுப்பவில்லை எனவும், மின் கட்டணப் பட்டியல் எப்போது அனுப்பப்பட்டது என்பதை அறிவிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

# பிறந்த சிசுவைக் கொலை செய்து வீதியில் வீசிய கணவன், மனைவி

## இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களாம்



பிறந்த சிசுவை உடனடியாக வீதிக்குக் கொண்டு வந்து கொன்று வீசிய கணவன், மனைவி ஆகியோரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் முல்லேரியா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண், பொலிஸ்பாதுகாப்பின் கீழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், அக்குழந்தையின் தந்தையெனக் கூறப்படும் நபர் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

முல்லேரியா, பண்டாரமாவத்தை - களனிமுல்ல தெருவில் உள்ள அவரது வீட்டில் செவ்வாய்க்கிழமை இரவு சிசுவைப் பெற்றெடுத்துள்ளதுடன் சிசுவைக் கொலைசெய்து வீதிக்குக் கொண்டுவந்துவீசியுள்ளதாக விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இரத்தக்கறைகளைத் தொடர்ந்து சென்ற பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற வீட்டுக்குச் சென்று குறித்த ஜோடியைக் கைது செய்துள்ளனர். சந்தேகத்துக்கிடமான கணவனும் மனைவியும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் முல்லேரியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

## நாடாளுமன்ற...

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

சபையைபராமரிக்க 88,000 ரூபாவை செலவிடுகிறது. அந்த பணத்திற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு பலன்கள் கிடைக்கிறதா? பல்வேறு அரசாங்கங்கள், பல நாடுகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்காகமாகாண சபை முறையை ஒழிக்க முடியாது

மாகாணசபைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே உள்ள அதிகாரம் குறித்து தனித்தனியாக தெளிவுபடுத்தப்படவில்லை. எனவே, மாகாண சபைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான விடயதானங்கள் பொருந்தாமல் இருக்கின்றன. பணியாற்றும் போது ஒருவருக்கொருவர் மோதிக்கொள்கிறார்கள். ஒரே பணி இரண்டு இடங் களில் செய்யப்படுகிறது. பணிகள் தாமதமாகிறன. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு பதிலாக வளர்ந்து வருகின்றன. இவ்வாறான காரணங்களினால் மாகாண சபைகளை வெள்ளை யானைகள் என்று கூறும் நபர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்.

எவ்வாறாயினும், அந்த அனைத்து குறைபாடுகளுக்கும்பலவீனங்களுக்கும் மத்தியில், மாகாண சபைகளை இலங்கையின் அரசியல் பாதையில் தீர்க்கமான தாக்கத்தை ஏற்படுத்திய கட்டமைப்பு என்று அழைக்கலாம். மாகாண சபைகள் திறமையான அரசியல் தலைவர்களை உருவாக்கும் மேடையாகவும் நிறைவேற்று அதிகாரம் மற்றும் நாடாளுமன்றத்திற்கான நுழைவாயிலாகவும் மாறியுள்ளது. கடந்த காலங்களில் மாகாணசபை உறுப்பினர் பதவியில் இருந்து அரசியல் பயணத்தை ஆரம்பித்த பலர் நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஏனைய பொறுப்பான பதவிகளை வகித்த பல சந்தர்ப்பங்களை நாம் காண முடியும். இன்று இந்த சபையில்அமர்ந்துள்ள அமைச்சர்களில் அநேகர், மாகாண சபை உறுப்பினர் பதவி முதல் முதலமைச்சர் பதவி வரை பல்வேறு பதவிகளை வகித்துள்ளனர்.

மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டபோது, சில அரசியல் கட்சிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. சில கட்சிகள் ஜனநாயக முறையிலும், சில கட்சிகள் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் எதிர்ப்பு தெரிவித்தன. பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. நாட்டின் சொத்துக்களும் தேசிய வளங்களும் எரிக்கப்பட்டன. அது கடந்த காலம். ஆனால்நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்கட்சிகள் எவையும், மாகாண சபைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அந்த அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் மாகாண சபைகளை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர்.

இங்கு இன்னொரு விடயத்தையும்நாம்கவனிக்க வேண்டும். மாகாண சபை அதிகாரப் பகிர்வு, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் இந்த நாட்டின் அதியுயர் சட்டமாகும். அதை நாம் புறக்கணிக்க முடியாது. நிறைவேற்று அதிகாரமும். நாடாளுமன்றமும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான எனது முன்மொழிவுகளையும்எதிர்கால திட்டங்களையும்நான் இந்த சபையில்முன்வைக்கிறேன். அந்த பரிந்துரைகளை ஆழமாக ஆராயுங்கள். உங்கள் யோசனைகளை சமர்ப்பிக்கலாம். அந்தக் கருத்துக்கள்அனைத்தையும் ஆராய்ந்து, மாகாண சபைகளின் வகிபாகம் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்துஇறுதித்தீர்மானத்தை எட்ட வேண்டிய பொறுப்பு முழுவதுமாக இந்த கௌரவ சபையையே சாரும்.

முன்னேற்றகரமான ஜனநாயகநாடுகளில்புதிய போக்கு என்ன? மையப்படுத்தப்பட்டநிர்வாகத்திற்கு பதிலாக பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தை உருவாக்குதல். அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார விடயங்கள் மக்களுக்கு நெருக்கமாக இருக்கும் வகையில் அதிகாரப் பரவலாக்கம். இதற்காக, உலகின் பல்வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாரப் பரவலாக்கம் என் பது நேரடி ஜனநாயகத்தை அணுகுவதற்கான ஒரு வழியாகக்கருதப்படுகிறது.

அனைத்து மக்களும் ஒன்றுகூடி முடிவெடுக்கும் நேரடி ஜனநாயகத்திற்குச் செல்ல எந்த ஆட்சி முறையாலும் இயலாது. ஆனால் அரசியல், பொருளாதார மற்றும்சமூகசெயல்பாட்டில் மக்களின்பங்கேற்பையும் விருப்பத்தையும் வெளிப்படுத்தும் வகையில் ஒரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க முடியும். மாகாண சபை முறைமை என்பது அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்லும் கட்ட மைப்பாகும்.

அதுமட்டுமல்லாமல், அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கான பலவழிமுறைகளை அண்மைக்காலமாக ஆரம்பித்துள்ளோம். துறைசார் குழுக்களைப்பலப்படுத்தப்படுத்தி, இதில் இளைஞர்களை இந்த நோக்கத்திற்காகவே இணைத்துக் கொண்டோம். மேலும், அடிமட்ட அளவில் மக்கள் ஆட்சியில் பங்கெடுக்க வேண்டும்என்ற நோக்கத்துடன் மக்கள் சபைகளை நிறுவதற்கு நாம் பணியாற்றி வருகிறோம். ஜன சபை செயலகத்தை ஆரம்பித்தோம். மாதிரி சட்டசபைகள் அமைக்கப்பட்ட பின்னர், சட்டசபை சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம்.

இந்தப்பின்னணியில் மாகாண சபைகள் ஊடாக மக்களுக்கு அதிக அதிகாரத்தை கொண்டுசெல்லும் வழிமுறைகளையும்திட்டங்களையும் தயாரிக்க வேண்டும் என நான் கருதுகின்றேன். அப்போது தான்தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக் கும் நிறுவனமாக மாகாண சபைகளைப் பயன்படுத்த முடியும்.

கடந்த சில வருடங்களாக நாடாளுமன்றத்தின் பல்வேறு குழுக்கள், மாகாண சபைகள் மற்றும் அவற்றின் எதிர்காலம் குறித்து ஆழமாக பரிசீலிக்கப்பட்ட பல ஆவணங்களை வெளியிட்டுள்ளன. அதில் ஒன்று எனது தலைமையிலான இலங்கைஅரசமைப்புபேரவையின் வழிநடத்தல் குழுவால்2017செப்டெம்பர் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட இடைக்கால அறிக்கையாகும். இடைக்கால அறிக்கையின் பரிந்துரைகளுக்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

அரசமைப்பின் 3, 4 மற்றும் 5 ஆகிய பிரிவுகளில் திருத்தம் செய்வது குறித்த பரிந்துரைகள் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த உத்தேச அரசமைப்பு திருத்தங்களை நாங்கள்நாடாளுமன்றத்தில் முன்வைக்கிறோம்.

பின்வரும்விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர் பான தேசிய கொள்கைகளைவகுப்பதில் மாகாண சபை களின் பங்களிப்பைப் பெறுதல்.

2. மாகாண பட்டியலில் உள்ள விடயங்கள் தொடர்பான தேசியக் கொள்கைகளை உருவாக்குவதன் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு பரவலாக்கப்பட்ட அதிகாரங்களை கையேற்பது அல்லது மாகாண சபையால் செயல்படுத்தப்படும் நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வது.

3. மேற்படி பரவலாக்கப்பட்ட விடயத்தை நடைமுறைப்படுத் துவதற்கான நிறைவேற்று மற்றும் நிர்வாக அதிகாரங்கள் மாகாண சபைகளிடமே இருக்கும்.

இடைக்கால அறிக்கை குறித்து கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜாதிக்க ஹெல உறுமய இ ஒன்றிணைந்த எதிர்க்கட்சி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகிய கட்சிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜனாதிபதியின் சட்டத்தரணி ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் ஆவணங்களை சமர்ப்பித்தனர். அதையும்நாம் கவனத்தில்கொள்ளவேண்டும்.

நாடாளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை மற்றும் மத்திய சுற்றயக் கூறு தொடர்புகள் பற்றிய உபகுழுவின் அறிக்கை என்பனகுறித்தும்கவனத்திற்குக் கொள்ள வேண்டும்.

இந்த அனைத்து ஆவணங்களின் ஊடாகவும், மாகாண சபை முறைமை எமது ஆட்சி கட்டமைப்பில் இருந்து அகற்றப்பட முடியாத ஒரு நிறுவன கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வாகவோ அல்லது அதிகாரப் பரவலாக்கல் அலகாகவோ மாகாண சபைகளை ஏற்காத மக்கள் விடுதலை முன்னணியும் ஜாதிக்க ஹெல உறுமயவும்கூட மாகாணசபை முறை மையில் திருத்தப்பட வேண்டிய விடயங்களும் திருத்தப்படக்கூடாத விடயங்களும் இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளன.

இவையனைத்தின் ஊடாகவும் மாகாண சபையானது இலங்கையின் ஆட்சி முறையில் இருந்தும் அரசியலில் இருந்தும் அகற்ற முடியாத ஒரு நிலையான காரணியாக மாறியுள்ளது என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை எட்ட முடிந்தால், தேசிய அடையாளத்தைப் பாதுகாத்து ஒரே தேசமாக எழுச்சி பெறவும், நாட் டின் அதிகாரத்தை மக்களிடம் நெருங்கிச் செல்லும் வகையில்பரவலாக்குவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். மாகாண சபை முறைமை, வடக்கு -கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப் பட்டன.

மாகாண சபைகளை சரியான பாதையில் வழிநடத்துவதன் மூலம் தேசிய ஒருமைப்பாடு பாதுகாக்கப் படுகிறது. மறுபுறம், இதுமிகவும் திறமையான மற்றும் அதிக சேவை வழங்கும் நிறுவன கட்டமைப்பாக உறுதிப்படுத்த முடியும். பொது மக்களுக்கு நெருக் கமான வகையில் அதிகாரப் பரவலாக்கத்திற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, மாகாண சபை முறைமையை பொதுமக்களுக்கு ஏற்ற, பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றும், நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் நிறுவனமாக மேம் படுத்துவதே எமது முதன்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

இதற்குத் தேவையான பின்னணியை உருவாக் கும் வகையில், பல சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் முன் வைக்கவும், பல புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நான் முன்மொழிகிறேன்.

1. பிரதேச செயலா ளர்கள் நியமனம்

2. கல்வி தொடர்பான சேவைகளை நடைமுறைப் படுத்த தேவையான அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்குதல்.

மாகாண சபை பட்டியல் அட்டவணை 3, உப ஆவணத்தில் குறிப்பிடப்பட் டுள்ள பாடசாலைக் கல்வி தொடர்பான அனைத்து அதிகாரங்களையும்செயற்படுத்துதல்.

3. தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகள்தொடர்பான சேவைகளுக்காகமாகாண மட்டத்தில் சபைகளை நிறுவுதல்

4. பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல்

5. விவசாயப் புத்தாக்கம் மற்றும் கீழ் மட்டத்திலான அனைத்து விவசாய சேவைகளையும் வழங்க மாகாண சபைகளுக்கு அதிகாரமளித்தல்

6. மாகாண சுற்றுலா மேம்பாட்டு சபைகளை நிறுவுதல்

7. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்கள் தொடர்பான வரையறையை ரூ. 4 மில்லியனில் இருந்து ரூ. 250 மில்லியனாக உயர்த்தகைத்தொழில்கள் சட்டத்தில் திருத்தங்களைச் சேர்த்தல்

இந்தநாடாளுமன்றம் உடன்படுமாக இருந்தால், இந்தஎல்லையை ரூ. 500 மில்லியனாகஉயர்த்தவும் தயாராக உள்ளோம்.

8. மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில பணிகள் இன்னமும் மத்திய அரசாங்கத்தின்கீழ் மேற்கொள்ளப்படுவதால் அந்த தவறை திருத்துதல்

9. 13 ஆவது அரசமைப்புதிருத்தத்தின்படி மாவட்ட அபிவிருத்தி சபைகளை நிறுவுதல்

மத்திய அரசாங்கத்தின் தேசிய கொள்கைகளுக்கு அமை வாக ஒவ்வொரு மாகாண சபைகளும் மூன்று வருட அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல். மத்திய அரசின் அபிவிருத்தித் திட்டங்களும் அந்தந்த அதிகார எல்லைகளுக்கு ஏற்ற வகையில் இந்தத் திட்டத்திற்குள் உள்வாங்க வேண்டும்.

இந்தமூன்றாண்டுதிட்டத்தைமாவட்டஅபிவிருத்தி சபைகள் ஊடாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்து வதற்கான பொறுப்பை மாகாண சபைகளுக்கு வழங்குதல்.

ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் இப்பணியில் இணைந்து செயற்படக்கூடிய சட்டரீதியான சூழலைதயார்படுத்துதல்.

தற்போது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியல், மாகாண சபை அதிகாரப் பட்டியல், ஒருங்கிணைந்த பட்டியல் ஆகியவற்றை மீளாய்வு செய்து, தேவையான திருத்தங்களைச் சமர்ப்பிக்க பிரதமர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளின் ஆதரவும் பெறப்படும்.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைச் சட்டத்தில் மாகாண சபை அமைச்சரின் பொறுப்புகள், மாகாண அமைச்சு செயலாளரின் பொறுப்புகள் மற்றும் ஏனைய அதிகாரிகளின் பொறுப்புகள் குறித்து குறிப்பாக வரையறுக்கப்படவில்லை. அதன் காரணமாக சில தவறான புரிதல்களும், பிரச்சினைகளும், குழப்பங்களும் ஏற்படுகின்றன. எனவேஅவர்களின்அதிகாரங்கள் குறிப்பிடப்படும் வகையில் மாகாண சபைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

மாகாண சபைகள் தொடர்பான இந்த சட்டங்களை திருத்தியமைத்து புதிய சட்டங்களை நிறைவேற்றிய பின்னர், நாடாளுமன்றம் சம்மதிக்கும் பட்சத்தில் மாகாண சபை தேர்தல்சட்டத்தில்திருத்தம்செய்வதற்கு தயாராக உள்ளோம்.

தற்போது, இது தொடர்பாக மூன்று முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1. மாவட்ட விகிதாசார முறையின் கீழ் தேர்தல் நடத்துதல்

2. மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குதல்

3. பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25% அல்லது அதற்கும் அதிக மாக உயர்த்துதல்

இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கும் மாகாணசபைதேர்தலைநடத்துவதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

மாகாண சபைகள் செயற்படும் வரை மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு ஆலோசனை சபையொன்றை நியமிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக; மாகாண மேற்பார்வைக் குழுத் தலைவர் அல்லது பிரதானிகள், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் மற்றும் மாகாணத்தில் உள்ள அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக் கப்படலாம்.

மேலும், சட்டம் இயற்ற மற்றொரு குழுவை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறோம். ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்ற பிறகு வரைவு சட்டங்களை சட்டமாக்குவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

ஆளுநரும், பெயரிடப் படும் நாடாளுமன்ற உறுப்பினரும் இந்த ஆலோசனை சபைக்கு இணைத் தலைவராக இருக்கவேண்டும். நிறைவேற்று அதிகாரம் தொடர்பான விடயங்கள் ஆராயப்படும் போது ஆளுநர் தலைமை தாங்குவார். சட்டவாக்க விவகாரங்கள் ஆராயப்படும் போது நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை தாங்குவார்.

தற்போது 45 மாகாண சபை அமைச்சுக்கள் செயற்படுகின்றன. இந்த அமைச்சுக்களுக்கு கண்காணிப்புக் குழுக்களை நியமித்து, வேறு பொறுப்புகள் வழங்கப்படாத நாடாளுமன்ற உறுப்பினர்களை தலைவர்களாகநியமிக்கலாம்.

13ஆவதுதிருத்தச்சட்டத்தின் கீழ், மாகாண சபைகளுக்கு அதிகாரம் வழங்குவதில் பொலிஸ் அதிகாரங்கள் மிகவும் உணர்வுபூர்வமான விடயமாக மாறியுள்ளது. எனவே ஏனைய அதிகாரங்கள் தொடர்பில் முதலில் நாம் உடன்பாட்டிற்கு வருவது மிகவும் நடைமுறைச்சாத்தியமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். நாம் கட்டம் கட்டமாகஇதனைத்தொடரலாம். உணர்வுபூர்வமான விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால், எந்த ஒருமித்த கருத்தையும் அடைவது கடினமாக இருக்கலாம். நாம் இறுதியில்இருந்துதொடங்காமல் ஆரம்பத்திலிருந்து தொடங்குவோம்.

எனவே முதலில் ஏனைய அதிகாரங்களைபரவலாக்குவது பற்றி பேசி, பொதுவான உடன்பாட்டை எட்டுவோம். அதிகாரப் பரவலாக்கம்தொடர்பானதென் பகுதி முதலமைச்சர்களின் அறிக்கையையும் நாம் அடிப்படையாக எடுத்துக் கொள்ளலாம்.

அனைத்து விடயங்களையும் பொது உடன்படிக்கையுடன் செய்வோம். நாட்டின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து பொதுவான முடிவுகளை எடுக்கும் பலமும் புத்தியும் இந்த நாடாளுமன்றத்திற்கு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவோம்.

எவ்வித அரசியல் நோக்கங்களும் இன்றி, நாட்டிற்குள் நிலையான நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக வடக்கு -கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். இலங்கையின் அபிவிருத்திக்கு நல்லிணக்கம் அத்தியாவசியமானது. வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அதுதொடர்பில் கலந்துரையாடலை நடத்தியிருந்தேன்.

அந்தசந்திப்புதொடர்பில் சபையிலிருக்கும் உறுப்பினர்களை தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமையாகும். அதுஉத்தேசபயணத்திற்கான தடமாகும் என்ற வகையில்அரசாங்கம்அதனூடாக முன்னேறிச்செல்ல எதிர்பார்க்கிறது. அந்த வகையில் தேசிய நல்லிணக்கத்திற்கு அவசியமான விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் தொடர்பிலான யோசனைகள் குறித்து கலந்தாலோசித்து இணக்கப்பாடுகளை எட்டிய பின்னர், அமைச்சரவை அனுமதிக்காக சமர்பிக்கப் படவுள்ளது. உரிய நடவடிக்கைகளின் பின்னர் சட்டமூலம்வர்த்தமானியில்அறிவிக்கப்படும்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறைக்கான இடைக்காலச்செயலகத்திற்கு பணிப்பாளர்நாயகம்ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சட்டம் மற்றும் கொள்கை, மக்கள் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்ஆகியவற்றை உள்ளடக்கியமூன்றுபிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன. இது தொடர்பிலான சட்டம் தயாரிக்கப்பட்ட பின்னர் உரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும். குறிப்பாக பங்குதாரர்களுக்கான ஆலோசனைகள், வழிக்காட்டல்கள் மற்றும் கொள்கை தயாரிப்புக்கானசெயலகத்தை நடைமுறைப்படுத்தவதற்கான பிரதம நிறைவேற்று அதிகாரிகள் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளன.

ஐ.நா பிரதிநிதிகள் உட்பட சிவில் சமூகப் செயற்பாட்டாளர்களின் பரிந்துரைகள் தொடர்ச்சியான மேற்கொள்ளப்பட்டுவருகின்றநிலையில், அந்தச் செயற்பாடுகள் நிறைவடைந்தவுடன் அமைச்சரவையின் அனுமதிக்கான சட்டவரைவுசமர்ப்பிக்கப்படும்.

தேசியசகவாழ்வுமற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலக சட்ட வரைவு அரசமைப்பிற்குஏற்புடையதா என்பதை அறிய சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும், இந்தி அலுவலகத்தினால் இனால் தயாரிக்கப்பட்ட நல்லிணக்கத்திற்கான தேசிய செயற்திட்டம் எதிர்வரும் காலங்களில் அமைச்சரவையில் சமர்பிக்கப்படும்.

போரில்காணாமல்போன வடக்கு - கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த 203 பேருக்கு ஜீலை 2023 ஆம் ஆண்டு வரை 40.6 மில்லியன் வழங்கப்பட்டுள்ளதோடு இந்த செயல்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்என்பதைமீண்டும்வலியுறுத்துகிறேன். காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு கிடைத்த 21,374 முறைப்பாடுகளில்இ 3இ462 மீதான விசாரணைகள் இதுவரை நிறைவு செய்யப்பட்டுள்ளன.மீதமுள்ள முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. மேலும், உண்மையைக் கண்டறியும் பொறிமுறையானதுமுழுமையாகச் செயற்பட ஆரம்பித்த பின்னர் அந்த பணிகளை துரிதப்படுத்த முடியும். காணாமல் போனோர் தொடர்பான தகவல்களைக் கோருபவர்கள் இடைக்காலச் செயலகத்தில் விரிவான தகவல்களைச் சமர்ப்பிப்பது சிறந்தது.

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் காணாமல் போனவர்கள் தொடர்பிலானதேடுதல்களை ஆரம்பித்துள்ளது. மூன்று மாதங்களுக்குள்தரவு உள்ளீடு செயற்பாடுகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல்காணமல்போனது தொடர்பில் சான்றிதழ்களை வழங்கும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன. காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள கொள்கைகளுக்கமைவாக வழக்குகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்ற நிலை யில், முன்னைய ஆணைக் குழுக்கள் மற்றும் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு கிடைக்கும் முறைப்பாடுகளை திறம் பட முகாமைத்துவம் செய் வதற்கான வழிக்காட்டல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதற்காக அமைச்சரவை அனுமதியைபெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஆனது 24 புதிய சபைகளை உள்ளடக்கியிருக்கும் என்பதோடு, ஒகஸ்ட் அதன் பணிகளை ஆரம்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பரிந்துரை சேவைகளுக்காக மாவட்டத்திற்கு ஒரு உதவிக் குழு வீதம் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

நட்டயீடு மற்றும் காணாமல் போனோர் அலுவலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை முன்வைப்பதற்கான முழுமையான சுதந்திரம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குவழங்கப் பட்டுள்ளது. காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் தற்போதும் தமது வேலைத்திட்டத்திற்கு அமைவாக நேர வரைவை தயாரித்துள்ளது.

விளக்கமறியல் இடப்பட்டவர்கள் 21, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவர், சிறைதண்டனைக் கைதிகள் 22 பேர், உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் கைதிகள் உள்ளனர். அரசியலமைப்பின் 34(1) சரத்துக்கமைய இறுதி இரண்டு பிரிவுகளிலுமுள்ள கைதிகளுக்கு மாத்திரம் பொது மன்னிப்பு வழங்குதல் தொடர்பில் ஆராயப் படவுள்ளது. அந்த பரிந்துரைகளை கருத்திற் கொண்டு எஞ்சியுள்ள சிறைத் தண்டனைகளை நிறைவு செய்து, 11 சிறைக் கைதிகளைவிடுவிப்பதற்காக நீதிமற்றும்சிறைச்சாலைகள் அமைச்சருக்குஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளது.

தேசியகாணிஆணைக் குழு, மற்றும் தேசிய காணிக் கொள்கையை விரைவாக நிறுவுவதற்கான நடவடிக்கைகள்எடுக்கப்பட்டு வருகின்றன. கைவிடப்பட்ட அரச காணிகளை பிறருக்கு வழங்குவது தொடர்பாக தேசியகாணிஆணைக்குழு கொள்கை வரைவை தயாரித்துள்ளது. அதுகுறித்த மேலதிக ஆய்வுகளையும் முன்னெடுத்து வருகிறது. காணி ஆணைக்குழுச் சட்டமொன்றையும்செப்டெம்பர் மாதத்துக்குள் (NLC) வழிகாட்டலுக்காக நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. 9 மாகாண பிரதிநிதிகள்மற்றும்அரசாங்க அதிகாரிகள் 12 பேரை உள்ளடக்கியதாக (NLC) யின் கட்மைமைப்பை மாற்றியமைக்கவும் எதிர்பார்க்கப்படவுள்ளது.

### காணி பிரச்சினை தொடர்பிலான யோசனைகள்

விசேட குழுவொன்று 2020 ஆம் ஆண்டில் அநாவசியமானவனப்பகுதிகளை விடுவிப்பது தொடர்பிலான தடையுத்தரவொன்றை உயர்நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக்கொண்டிருந்ததை குறிப்பிட முடியும். அதன் பின்னர் இவ்வருடத்தின் மே மாதத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாக 1985 காணி பயன்பாடு தொடர்பிலான வரைவுக்கமையவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசங்களை எல்லை நிர்ணயம் செய்யும் இயலுமை தொடர்பிலும் கோரப்பட்டிருந்தது.

இதன் பலனாக, இது தொடர்பானஅமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு, அந்த வனப்பிரதேசங்களை

தொடர்ச்சி 11ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

## நாடாளுமன்ற...

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிப்பதற்கு அமைச்சுக் குழுஒன்றின்ஊடாகஅனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தடை உத்தரவை நீக்கிக்கொள்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளைஇவடக்கு கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள்தொடர்பில்மேற்படிகாணிப் பயன்பாட்டு வரைபடங்கள், தற்போதைய காணி பாவனை முறைகள் மற்றும் பிரதேச செயலாளர்களின் முன்மொழிவுகளைமையப் படுத்தி தரவுக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு உரிய தகவல்களை பிரதேச செயலகங்கள் ஊடாக பெற்றுக்கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு2மாதகாலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னைய தடை உத்தரவை நீக்கிக்கொண்ட பின்னர் பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் அமைச்சுக் குழுக்களினால்ஆராயப்படவுள்ளது. ஜனாதிபதி செயலாளரின் தலைமையிலான குழுவொன்றினால் காணி தொடர்பிலானபிரச்சினைகள் ஆராயப்படும்.

நாடு முழுவதிலும் தேசிய திட்டத்தின் கீழ் காணி எல்லை நிர்ணயம் மற்றும் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனதொல்பொருள்திணைக்களத்திற்கும் மத்திய கலாசார நிதியத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள், இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை எவ்வாறுநடைமுறைப்படுத்த வேண்டும் என்பனவற்றை முதன்மைப்படுத்தி திட்டமிடுமாறு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளை அடையாளம் காண்பதற்கு அல்லது முறையாக கையகப்படுத்துவதற்கு தேவையான செயல் திட்டம் தொல்பொருள் திணைக்களத்தினால் முன்மொழியப்படும்.

தென் இந்தியாவின் புனர்வாழ்வு முகாம்களில் வாழும்இலங்கையர்களுக்கு அனைத்துநாடுகளுக்குமான கடவுச் சீட்டுகளை பெற்றுக் கொடுப்பதற்கானவரைபடம்.

தென்னிந்திய புனர் வாழ்வுமுகாம்களில்வசிக்கும் 2,678 இலங்கையர்களின் பட்டியல் குடிவரவு மற்றும் குடியகல்வுதிணைக்களத்திற்கு கிடைத்துள்ளது. மேற்கூறிய எண்ணிக்கையில், இலங்கையின் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை இரண்டையும் வைத்திருப்பவர்களுக்கு அனைத்து நாடுகளுமான கடவுச்சீட்டுகளை வழங்க முடியும். அந்த ஆவணங்களை வழங்குவதற்கான கால அவகாசம் இரண்டு முதல் நான்கு வாரங்களாகும். தென்னிந்தியாவில் புனர்வாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கையர்களுக்கு அனைத்து நாடுகளுக்குமானகடவுச்சீட்டுவழங்குவது குறித்து பரிசீலிப்பதற்கான தீர்மானங்கள்மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் இடம்பெற்றமோதல்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு மாகாண ஒருங்கிணைப்பு அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. வடக்குகிழக்கின்உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தனர் அல்லது அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வாழ்ந்தனர். இயல்பு நிலைக்குத்திரும்பியபின்னர் அவர்கள் பெரும்பாலும் தங்கள்சொந்தஇடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையான மக்களை வீடு மற்றும் வாழ்வாதார உதவிகளுடன் மீள்குடியேற்றியதன் பின்னரான நிலைமை தொடர்பிலான விவரங்கள் சபையில் சமர்பிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்த குடும்பங்களை மீள் குடியமர்த்தும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளை சேர்ந்தவர்களை மாத்திரமே குடியமர்த்தவேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் 15 நலன்புரி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 136 குடும்பங்கள் உள்ளன. அத்தோடு நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிக்கும் 2,175 குடும்பங்கள் உள்ளன. கிளிநொச்சி நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இல்லை. எவ்வாறாயினும் யாழ். குடாநாட்டில் 182 குடும்பங்கள் அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிப்பதோடு, பச்சிலைப்பள்ளி பிரிவில் 177 குடும்பங்கள் உள்ளன.

கிழக்கு மாகாணத்தின், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மாத்திரமே இடம்பெயர்ந்தவர்கள் வசிக்கின்ற நிலையில் அவர்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வசிக்கின்றனர். அங்கு நலன்புரி நிலையங்கள் எவையும் கிடையாது. இடம்பெயர்ந்தவர்களை மீண்டும் குடியமர்த்துவது தொடர்பில்விசேடஅவதானம் செலுத்த வேண்டிய அதே நேரம், அதற்காக தனியார் பகுதிகளை பொதுப் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வேண்டியஅவசியம்ஏற்படும். அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முறைமையொன்றை தயாரித்து பிரச்சினைக்கு உடனடி தீர்வுகளை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

### முப்படைகளினால் விடுவிக்கப்படவுள்ள காணிகள் - வடக்கு மாகாணம்

யாழ்ப்பாணத்தின் முழுமையான நிலப்பகுதி 253,283ஏக்கர்களாககாணப்படுவதோடு, 2009 ஆம் ஆண்டில் பாதுகாப்பு படையினரால் 26,812 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டிருந்தது. 2009 இல் படையினரால் கையகப்படுத்தப்பட்டிருந்த காணிகளில் 90% - 92% வரையிலான காணிகள் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 817 ஏக்கர் அரச காணி, 22,101 தனியார் காணி உள்ளடங்களாக22919ஏக்கர் காணிவிடுவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸாரினால் கையப்படுத்தப்பட்டுள்ள நிலையில் காணப்படும் காணியின் அளவு 3த754 ஏக்கராகும் என்பதோடு, அவற்றில் 862 - 2892 ஏக்கர் அரச மற்றும் தனியார் காணிகள் உள்ளன.

கீழ்வரும் பிரிவுகள் ஊடாககாணிகளைவிடுவிக்க எதிர்பார்க்கப்படுகிறது:

(i) இராணுவம் மற்றும் கடற்படையினரால் அடையாளம்காணப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தில் 1.4 ஏக்கர், கிளிநொச்சியில் 13 ஏக்கர் மற்றும் முல்லைத்தீவில் 20 ஏக்கர்காணிகள்உடனடியாக விடுவிக்கப்பட உள்ளன.

(ii) யாழ்ப்பாணத்தில் 3 - 6 மாதங்களுக்குள் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள்தொடர்பில்இராணுவத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

(iii) பலாலி இராணுவ முகாமில் இருந்து சுமார் 290ஏக்கர்காணிவிவசாயம் மற்றும் பருவகால பயிர்கள் உள்ளிட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தற்காலிகமாக விடுவிக்கப்படவுள்ளது.

(iv) இராணுவத் தளபதியின் பணிப்புரையின் பேரில் வடமாகாணத்தில் தற்போதும் விடுவிக்க முடியாத காணிகளை விடுவிப்பது தொடர்பிலான சாத்தியக் கூறுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

இதுவடக்குமக்களிடத்தில் கருத்து வேறுபாடுகளை தோற்றுவிக்கும் விவகாரம் என்பதை நான் அறிவேன். அந்த வகையில் மேற்படி மாகாணத்தில்படையினரால் கையகப்படுத்தப்பட்ட மக்கள் காணிகளை முடிந்த வரையில் விடுப்பதே எனது நோக்கமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கு விரிவான மற்றும் நடைமுறைத் திட்டங்களை உருவாக்குவது அவசியமாகும். 2030 ஆம் ஆண்டளவில்நாட்டின்தேசிய மின்சாரத் தேவையில் 70மூ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பச்சை ஹைட்ரஜன் மற்றும் பசுமை அம்மோனியா உற்பத்தி மூலம் பிராந்தியத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனைப் பயன்படுத்துவதே வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களின் முதன்மைநோக்கங்களாகும். இந்த மூலோபாயம் முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் கொழும்பு, பூநகரி மற்றும் திருகோணமலை துறைமுகங்களை பசுமை ஹைட்ரஜன் ஏற்றுமதி மையங்களாக மாற்றுவதும் அவற்றின் நோக்கமாக காணப்படுகிறது.

இந்த துறையில் கூட்டு முயற்சிகளை எளிதாக்க இந்தியாவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு சூரிய மற்றும் காற்றாலை சக்திக்கான முதலீடு மற்றும் ஏற்றுமதிக்கு சாதகமான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளைஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்ய அதானி குழுமம் முன்வந்துள்ளது. கூட்டு அணுகுமுறை இந்த பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று நான் நம்புகிறேன். கூடுதலாக, 'வடக்கிற்கு நீர்' திட்டம் பல்வேறு நீர்வளங்களின் வளர்ச்சியைக் கொண்டுள்ளது. இந்த நிலையில், பூநகரி ஏரி மற்றும் மல்வத்து ஓயாவின் நீர்ப்பாசன திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க அரசாங்கம் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. யாழ்ப்பாணக் குளத்திற்கு நன்னீர் கொண்டு வருவதற்கும் இரணைமடு குளத்தின் கொள்ளளவை அதிகரிப்பதற்கும் யாழ்ப்பாணத்திற்கான கங்கை தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. சிறிய ஏரிகளை புதுப்பிக்கும் திட்டத்தை நிறைவேற்றுவது முக்கியம். இத்திட்டம் வடமாகாணத்தில் விவசாயம் மற்றும் சூரியசக்தி துறைகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

வடக்கில் வான்வழி மற்றும் கடல்வழி தொடர்பாடல்களைமேம்படுத்துவதும் அவசியம். காங்கேசன்துறை துறைமுகம், வவுனியா மற்றும்பலாலிவிமானநிலையங்களின்அபிவிருத்திமற்றும் வடக்கிலிருந்து இந்தியாவின் தெற்கை இணைக்கும் படகு சேவைகளுக்கான வசதிகளும் உருவாகும்.

காங்கேசன்துறை துறைமுகம், பரந்தன் மற்றும் மாங்குளம் ஆகிய இடங்களில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் அமைக்கப்படுகின்றன. மன்னார் கோட்டை, காங்கேசன்துறை துறைமுகம், தீவுகள் மற்றும் வடமராச்சி ஆகிய பகுதிகளை சுற்றி சுற்றுலா படகுசவாரிதிட்டத்தின்மூலம் யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் உள்ள சுற்றுலா தலங்களை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளோம். விவசாய நவீனமயமாக்கல்வேலைத் திட்டத்தின் கீழ் வன்னி யில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்க முயற்சிக்கின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்க வளாகம் உயர் கல்வியில்சிறந்து விளங்கும் இடமாகஇருப்பதால், அதுஒரு பல்கலைக்கழக நகரமாக வளர்ச்சியடைவதற்கான சாத்தியம் உள்ளது. அதற்கு மேலதிகமாக SLIITஇன் உதவியுடன் காங்கேசன்துறையில் மற்றுமொரு வளாகத்தை நிறுவுவதற்கான காணியும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் கிழக்கு மாகாணத்தை திருகோணமலையை மையப்படுத்தி அபிவிருத்தி செய்யும் திட்டங்களும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எமது அண்டை நாடான இந்தியாவின் ஆதரவு இலங்கைக்கு கிடைத்து வருகிறது. தொழிற்துறைத வலுசக்திமற்றும்பொருளாதார நடவடிக்கைகளின் தேசிய மற்றும் பிராந்திய மையமாக திருகோணமலையைமேலும் மேம்படுத்துவதற்கான இந்தியாவின் ஒப்பந்தம் மற்றும்திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை அபிவிருத்தி செய்வதில் தொடர்ந்து ஒத்துழைப்பது மேலும் பல நன்மை அளிக்கும். கிழக்கு மாகாணம் கடல் விவகாரங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. திருகோணமலை ஒரு முக்கிய மூலோபாய துறைமுகமாக மாற்றப்பட வேண்டும். கிழக்கு மாகாண துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் பிராந்தியத்தில் பல வேலைத்திட்டங்கள் குறித்துகலந்துரையாடுவதும் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதும் முக்கியமானதாகும்.

இத்துறைமுகத்தின் பொருளாதார செயற்பாடுகள் திருகோணமலை மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட முடியாது. இது அனுராதபுரம், வவுனியா மற்றும் தம்புள்ளை நகரங்களுடன் இணைக்கப்பட வேண்டும், குறிப்பாக வன்னி, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் விவசாய உற்பத்தியின்பெரும்பகுதிக்கு பொறுப்பான மாவட்டங்கள். இந்த மாகாணத்தில் தொழில் வளர்ச்சியில் இந்தியா முன்னணியில் இருப்பதால், ஒரு தொழிற்சாலை வலயம் உருவாக்கப்பட வேண்டும். எனவே, துறைமுகமும் இணைக்கப்படும், அதற்காக கூட்டுபணிக்குழுவைஅமைக்க திட்டமிட்டுள்ளோம்.

பொருளாதார அடிப்படையில் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்காக பல்வேறு விடயங்களை குறிப்பிட முடியும். குறிப்பாக,

கிழக்கு மாகாணத்திற்கு அருகாமையில் அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் தம்புள்ளை கலாச்சார முக்கோணம் அமைந்துள்ளது. இது மட்டக்களப்பு, அறுகம்பே மற்றும் திருகோணமலை கடற்கரைகளுக்கு சுற்றுலா மேம்பாட்டுக்கு வழிவகுக்கும். வெருகல் - அறுகம்பே வரையிலான கடற்கரை அபிவிருத்தி திட்டமான சுபானா ஜுரோங் திட்டத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

குரூஸ் சுற்றுலா முயற்சிகளும் இந்த வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். கிழக்கு மாகாணத்தில் மீன்பிடி, விவசாயம்மற்றும்கால்நடை வளர்ப்புத் துறைகள் நவீனமயமாக்கலுக்கு தயாராக உள்ளன. இந்த நிலையில், மகாவலி தெற்கு கரையில் A மற்றும் B வலயங்கள் திறக்கப்படுவது விவசாய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

நாடுமூன்றாம்தரப்புக்கு விற்கப்படுகிறது என்ற தவறான எண்ணத்தை கொண்டிருக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடு வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் போதுஇளந்தநாடும்தனியாக முன்னேற முடியாது என்ற இலங்கையின்அனுபவத்தை புரிந்துகொள்வார்கள். நமது அயல் நாடான இந்தியாவுடன்வலுவானஉறவில் பேணுவதால்இஎமது இயலுமையை மேலும் பலப்படுத்தும். இந்தநாட்டின் இறையாண்மைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும்செயல்களில் நான் ஈடுபடமாட்டேன் என உறுதியளித்திருக்கும் நிலையில், நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதும் நல்லிணக்கத்திற்கும் வழிவகுக்கும் என்ற நிலைப்பாட்டிலிருந்து அனைவரும் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

சரிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான கடினமான காலகட்டத்தை இன்று நாம் கடந்து கொண்டிருக்கிறோம். விரைவான பொருளாதார வளர்ச்சியை நாம் அடைய வேண்டிய தருணம் இது. தற்போதைய மாகாண சபை முறைமையில் இவ்வாறான விரைவான அபிவிருத்திக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளன. 1977 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் கீழ் எமது நாடு விரைவான பொருளாதார அபிவிருத்தியை அடைந்தது. ஆனால் யுத்தம் காரணமாக அந்த அபிவிருத்தி தடைப்பட்டது. இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் போரினால் பாதிப்பை எதிர்கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் யுத்த நடவடிக்கைகளில் நிறைவை காண முடிந்தது. தற்போது யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகிறது. ஆனால் அதிகார பகிர்வு மற்றும் மாகாண சபை பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் இயலுமை எமக்கு கிட்டவில்லை.

எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே தேசமாகச் செயற்படுவோம். நமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காண வேண்டும். வேறு எந்த நாடும் அல்லது வெளி தரப்பினால் நமது பிரச்சினைகளை தீர்க்க முடியாது. எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக்கொண்டு மீண்டும் விரைவான அபிவிருத்தி பாதையை யோசனைக்கு பயணிப்போம்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றுகடந்தஒருவருட காலப்பகுதியில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், பொறுப்பு மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் பல முறைமை மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசியலமைப்புத் திருத்தத்தைக்கொண்டுவருவதற்கு வேறு எந்தக் கட்சியிடமிருந்தும் வலுவான செல்வாக்கு செலுத்தாத நிலையில், 21ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நான் இந்த சபையில் முன்வைத்தேன். அது நிறைவேற்றப்பட்டது. அதனால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

தேர்தலின் போது நடக்கும் பல்வேறு நிதி முறைகேடுகள் மற்றும் ஏனைய விடயங்களைத் தடுக்கும் வகையில் தேர்தல் செலவுக் கட்டுப்பாட்டுச் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நமது நாட்டிற்கு பெரும் இடையூறாக மாறியுள்ள ஊழல்மற்றும்மோசடிகளைத் தடுக்க பலவீனமான சட்டமே காணப்படுகிறது. மிகவும் வலிமையானஇ சர்வதேச தரத்துக்கு ஏற்ற ஊழல் எதிர்ப்பு சட்டத்தை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம்.

அரசாங்கங்களின் தேவைகளுக்கேற்ப நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டை நினைத்தவாறு மேற்கொள்வதைத் தடுப்பதற்காக மத்திய வங்கி சுயாதீன சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இளைஞர் போராட்டங்களில், முறைமை மாற்றம் தேவை என்று வலுவாக வலியுறுத்தப்பட்டது. நமது நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களும் இந்த முறைமைமாற்றவேண்டும் என்றுகோருகின்றனர். நான் முன்பு குறிப்பிட்ட அனைத்து முன்னெடுப்புகளையும் நாங்கள் முறைமை மாற்றத்திற்கு அடித்தளமாகவே தொடங்கினோம். மாகாண சபைகளிலும் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

வினைத்திறன் மிக்க, விரயமற்ற, ஊழலற்ற, பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய, பொதுமக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் மாகாண சபை முறைமையைக் கட்டியெழுப்புவதற்கு வலுவான முறைமை மாற்றத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது. மக்களை அதிகளவில் ஒருங்கிணைக்கவும் தேசிய ஐக்கியத்தை பலப்படுத்தவும் மாகாண சபைகளைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உள்ளது.

இது தொடர்பான எனது முன்மொழிவுகள் மற்றும் வழிமுறைகளை நான் முன்வைத்துள்ளேன். இதனை ஆழமாக ஆராய்ந்துஉங்கள்கருத்தை தெரிவிக்கலாம்.

இதனை தொடர்வதற்கான முழு அதிகாரமும் நாடாளுமன்றத்திற்கே உள்ளது. பொது உடன்பாட்டின் மூலம் அந்த நடவடிக்கையைஎடுக்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இந்த நாடாளுமன்றத்திற்குபலமும் பரந்த அறிவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்த ஒன்றிணையுமாறு இந்த கௌரவ சபையிடம் கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.

# வடக்கிற்கு அதிகாரங்களை கொடுத்தால் தீர்வு கிட்டுமா?

## அத்துரலிய ரத்தனதேரர் கேள்வி



வடக்கிற்கு அதிகாரங்களைக் கொடுப்பதால் மட்டும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தனதேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய சூழல் 50 வீதம் தற்போது உள்ளது. எஞ்சிய 50 வீதம், நாட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்தால் கிடைத்துவிடும்.

இதனை தான் ஜனாதிபதி முதலில் சிந்திக்க வேண்டும். வறுமையால் இன்று அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை கதைப்போம். வடக்கிற்கு அதிகாரங்களைக் கொடுப்பதால் இந்தப் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா?

13 ஐ கொடுத்தால் யுத்தம் முடிந்துவிடும் என்று அன்று கூறினீர்கள். யுத்தம் முடிந்ததா? 24மணிநேரத்தில்சமாதானம் கிடைத்துவிடவில்லை.

தற்போது நீங்கள் செய்யும் செயற்பாடுகள், மீண்டும் நாட்டில் அமைதியின்மைக்குத்தான் வழிவகுக்கும்.

இனங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமெனில் முதலில் தேர்தலை நடத்துங்கள். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# காட்டு யானைகளினால் கதறும் கல்முனை மக்கள்



கல்முனை மாநகரசபை பிரிவிற்குட்பட்ட நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, மருதமுனைஆகியபகுதிகளில்அண்மைக்காலமாக காட்டுயானைகளின் அட்டகாசம் அதிகரித்துவருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மக்களின் குடியிருப்பு பகுதிக்குள் நுழையும் காட்டுயானைகள் சுற்றுமதில் பயனுள்ள மரங்கள் மற்றும் தோட்டங்களைத் துவம்சம்செய்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரகாலமாக என்றுமில்லாத வகையில் நேற்று காலை மருதமுனை பகுதியில் தனியன் காட்டுயானை ஒன்று அட்டகாசம் புரிந்துவருவதாகவும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அதிகாலை 2 மணியளவில் நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, மக்கள் குடியிருப்பு நிறைந்துள்ள பகுதிக்குள் நுழைந்த குறித்த காட்டுயானை அங்குள்ள வீட்டு மதில் மற்றும் வாழை, பலா உட்பட பயனுள்ள மரங்களையும் துவம்சம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இரவு நேரங்களில் மக்களின் குடியிருப்பு பகுதிக்குள் குறித்த யானை நுழைவதால் அப்பகுதி மக்கள் அச்சத்துடன் உறக்கமின்றி விழித்திருப்பதாகவும் இதனால் பல்வேறு உடல் உள உபாதைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே, காட்டுயானைகளை விரட்டுவதற்க்குசம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.08.2023இல் வெளியிடப்பெற்றது.